சத்திய வேத

# பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

83-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1958-ம் ஆண்டு சித்திரை மாதம் 10-ந் திகதி வியாழக்கிழமை — பிரிதசதம் 10 | 13-ம் இலக்கம்

## உயிர்த்தெழுந்திருக்கவில்லை என்றால்!

(சி. எஸ். நாயகம் — பத்தாவத்தை, இளவாலை)

உலகஇரட்சகராகிய கிறீஸ்துநாதருக்குத் தேவசுபாவம், மனிதசுபாவமாகிய இருவகைச்சுபாவங்களுண்டு. அதனால் தான் அவர் தமதுபூலோகசீவியத்திலே தம்மைத் "தேவகுமாரன்" என்றும், "மனிதகுமாரன்" என்றும் பலமுறைகளில் அழைத்திருக்கிறார். தேவகுமாரன்என்றமட்டில் அவர் சகலத்திலும் பிதாவுக்குச் சரியொத்தவராயிருக்கிறார். ஏனெனில், தேவன் ஒரேதேவன் தான். பலதேவர்கள்இல்லை(எபே.4:5.). எனவே, தேவகுமாரனாகிய அவர் தேவனேயன்றி வேறுயாருமல்ல. ஆனபடியாற்தான் "என்னைக்காண்கிறவன் என்பிதாவையும் காண்கிறான் (அரு. 14: 9.). ஏனெனில், "நானும்பிதாவும ஒன்றாயிருக்கிறோம்" (அரு. 10. 30) எனக் கூறியிருக்கிறார். ஆனால், மனிதசுபாவத்திலோ பாவம்ஒன்றுநீங்கலாக மற்றும்சகலத்திலும் அவர்நம்மைப் போல் இருக்கிறார்.

அவர் உண்மையானமனிதனும், உண்மையானதேவனும் என்றமட்டிலே — அதாவதுதேவனும், மனிதனும் ஒன்றான கடவுள்என்றமட்டிலே உலகஇரட்சணியவிஷயத்தில் முற்றும் மனிதசுபாவத்திலேயே பாடுபட்டார். அங்ஙனம் பாடுபட்டபொழுது, அவர் தமதுதெய்வீகம் ஓர்கடுகத்தனையுமே தம்முடைய திருப்பாடுகளிலும, மரணத்திலும் கலக்கவிட்டவரல்ல. ஆனால், அவரின் ஒட்டோலகமான உத்தானமோ முற்றும் அவருடையதெய்வீகத்தில் ஊன்றிநின்றது. ஏனெனில், அவர் தெய்வீகத்தில் பாடுபடமுடியாது. மனுஷீகத்தில் அவர் உயிர்த்தெழமுடியாது. ஏனெனில், மனுஷீகத்தில் மாத்திரம் பாடுபடலாம். தெய்வீகத்தில்மாத்திரம் தமதுசுயவல்லமையால் உயிர்த்தெழலாம். எனவே, கிறீஸ்துநாதரின் மனுஷீகத்தையும், தெய்வீகத்தையும்எண்பிக்க அவர் மெய்யான சர்வேசுரனும், மெய்யானமனிதனுமென்று எண்பிக்க — அவர்மனுஷீகமும், தெய்வீகமும் ஒன்றானகடவுள் என்பதைஎண்பிக்க அவரின்திருப்பாடுகளும், சிலுவைமரணமும், மகிமையானஉத்தானமுமே முத்திரையிட்டு உறுதிப்படுத்துவதற்குப் போதியசான்றுகளாகும்.

### கிறீஸ்துநாதர் மெய்யான சர்வேசுரன்

கிறீஸ்துநாதர் தேவசுபாவத்தில் ஒருவராயிருந்தாலும் ஆள்வகையில் மூவராயிருக்கிறாரென்றும், மூன்றுதேவஆட்களிலும் கிறீஸ்துநாதர் பாவத்தாலே கெட்டுப்போன மனுக்குலத்தை மீட்டிரட்சிக்கவந்த இரண்டாம்ஆளாகிய சுதனாகியசர்வேசுரனென்றும் அறிவோம். அவரையே 'வார்த்தையானவர்' என்று வேதாகமம்கூறுகின்றது. வார்த்தையானவர் ஆதியில்இருந்தார். அவர் சர்வேசுரனிடத்திலிருந்தார். அவர் சர்வேசுரனாகவும் இருந்தார். ஒருநாள் பரிசேயர் அவரைநோக்கி: "நீர்யார்?" என்று கேட்டபோது, அவர் உத்தாரமாக, "உங்களிடத்தில்பேசுகிறநானே ஆதி" (அரு. 8: 25.) என்றார். அன்றியும், "சர்வேசுரன் என்றுமஇருப்பவர். அதனால் கிறீஸ்துநாதர் நேற்றுஇருந்தவர், இன்றும்இருக்கிறவர், என்றும் இருப்பவர்" என்று மற்றோரிடத்தில் வேதாகமம்கூறுகின்றது (எபி. 13: 8.). இன்னும்தாம் மெய்யானசர்வேசுரன் என்பதை அவர் உலகம்கண்டு வியக்கத்தக்க ஆச்சரியமான பலபுதுமைகளால் எண்பித்தார். என்னைவிசுவசிக்க உங்களுக்கு மனமில்லாதபோதிலும், என்புதுமைகளைக் கண்டாகிலும் நான்தான் அவர்என்று விசுவசியுங்களென அந்தநாளிலே அவர் யூதர்களுக்குச் சொன்னதுபோல இந்தநாளிலே எம்மெல்லோரையும்நோக்கிச் சொல்லுகிறார். எனவே, கிறீஸ்துநாதர்மெய்யான சர்வேசுரன்என்பதை நாமெல்லாம் இதயபூர்வமாய் விசுவசித்து, இந்த அரியகொடையாகிய விசுவாசத்தை நாம் என்றும்பாதுகாத்து, அதற்காக நமதுஇரத்தமெல்லாம்சிந்தி உயிரைத் தியாகஞ்செய்யநேரிடினும் எவ்வித தயக்கமுமின்றி அஞ்சாநெஞ்சுடன் வீரத்துவமாக நின்று அதற்குச்சாட்சிகளாவோமாக. ஏனெனில், "விசுவாசத்தை மறுதலித்ததுரோகி ஒன்றுக்கும்உதவாத மனுஷன்; நரகத்துக்கெனப் புடைக்கப்பட்டபதர்" என்பது வேதவாக்கியம்.

### கிறீஸ்துநாதர் மெய்யான மனிதன்

"ஓர்கன்னி கர்ப்பந்தரித்து ஓர்குமாரனைப்பெறுவாள். அவருக்கு "எம்மனுவேல்" என்னும் நாமமிடுவார்கள்" (இசை. 7: 14.) என்றும், "அவள் (கன்னிமரியாள்) ஓர்குமாரனைப்பெறுவாள். நீர்அவருக்கு 'யேசு' எனும் நாமம்சூட்டுவீர்" (மத். 1: 21.) என்றும், "இஸ்பிரீத்துசாந்து உமதுமேல் எழுந்தருளிவருவார். உந்நதருடைய வல்லபமானது உமக்குநிழலிடும். ஆகையால், உம்மிடத்தில்பிறக்கும்பரிசுத்தர் 'தேவசுதன்' எனப்படுவார்" (லூக். 1: 35.) என்றும் இவ்வண்ணமே தீர்க்கதரிசியாலும், சம்மனசினாலும் கூறப்பட்டவர் கிறீஸ்துநாதர்தாமேயன்றி வேறெவருமல்ல. கீழ்த்திசையில் நவமாகத் தோன்றிய நட்சத்திரத்தினால் வழிநடத்தப்பட்டு, "யூதருடையஇராசாவாகப் பிறந்தவர்எங்கே? எனெனில், அவருடைய நட்சத்திரத்தைக்கண்டு அவரைஆராதிக்க வந்தோம்" (மத். 2: 2.) என்று ஞானிகளாகிய அந்த மூவரசர்களால் ஏரோதரசனிடம் வினவப்பட்டவர் அவதாரதேவனாகிய கிறீஸ்துநாதர்தாமேயன்றி வேறுயாருமல்ல. யாக்கோப்பின் கிணற்றுக்கட்டின்மீது அவர் களைகொண்டிருக்கையில் அங்கு தண்ணீர்மொள்ளவந்த ஸ்திரீயோடு சம்பாஷிக்கையில் அவள் அவரைநோக்கி: "கிறீஸ்துநாதர் எனப்படுகிற மெசியாஸ்வருகிறாரென்று அறிவேன்; அவர் வரும்போது எல்லாவற்றையும் எங்களுக்குஅறிவிப்பார்" என்றாள். அதற்கு யேசுநாதர் "உன்னோடுபேசுகிற நானே அவர்" என்று அவளுக்குத் திருவுளம்பற்றினார். அப்போதுஅவள் தன் குடத்தைவைத்துவிட்டு ஓட்டமும் நடையுமாய்த் தனது ஊருக்குள்ளே போய் அவ்விடத்துச்சனங்களை நோக்கி: "ஒருமனிதனை வந்துபாருங்கள்; நான் செய்ததெல்லாவற்றையும் அவர்எனக்குச்சொன்னார்; ஒருவேளை அவர்தான் கிறீஸ்துநாதரோ" என்றாள். அவர் மனிதனாய் இல்லாதிருந்தால் அந்தச் சமேரியஸ்திரீ அவரை மனிதனென்று அழைத்திருக்கமாட்டாள். அந்தஊரவர்களும் அவள்சொல்லைக்கேட்டுத் திரளாகவந்து அவர்போதனையைக்கேட்டு அவரைவிசுவசித்தபின் அந்தஸ்திரீயை நோக்கி: "இப்பொழுது நாங்கள்விசுவசிக்கிறது உன்னுடையவார்த்தையைப் பற்றியல்லவே; நாங்களே அவருடையவாக்கைக்கேட்டு, அவர்மெய்யாகவே உலகஇரட்சகரென்று அறிந்திருக்கிறோம்" (அரு. 4: 42.) என்றார்கள். இவ்விதம் கிறீஸ்துநாதர் மெய்யானமனிதன்என்பதை எண்பிக்க வேதாகமத்தில் எவ்வளவோ அத்தாட்சிகள் மலிந்துபொலிந்துகிடக்கக் காணலாம்.

### உயிர்த்தெழுந்திருக்கவில்லைஎன்றால்

நம்முடைய ஆத்துமமும் சரீரமும் ஒன்றித்தவகையில் நாம்எவ்விதம் உயிர்வாழுகிறோமோ அதேபோன்று கிறீஸ்துநாதரிடத்தில் மனுஷீகமும், தெய்வீகமும் ஒன்றித்தவகையில் அவர்மெய்யான சர்வேசுரனும், மெய்யான மனுஷனுமாயிருக்கிறார். தம்முடைய மனுஷீகத்தை எண்பிக்கத் தம்மை "மனுமகன்" என்றழைத்தார். தமது தெய்வீகத்தை எண்பிக்கத்தம்மைத் "தேவகுமாரன்" எனப் பிதாவைக் கொண்டு உறுதிப்படுத்தினார். தாமும் பிதாவும் ஒரேமெய்யான கடவுள்என்பதை எண்பிக்க "நானும்பிதாவும் ஒன்றாயிருக்கிறோ" மென்றார். எந்தவகையிலேபார்த்தாலும் கிறீஸ்துநாதர் மெய்யானசர்வேசுரனும், மெய்யான மனுஷனும் ஒன்றானதேவன்என்பதில் ஆட்சேபனைக்கிடமேயில்லை. இதைஎண்பிக்குமாறு அவர் தமது சீஷர்களை நோக்கி: "மனுமகன் அநேகபாடுபடவும், மூப்பராலும், பிரதான ஆசாரியராலும், வேதபாரகராலும் ஆகாதவனென்று தள்ளப்படவும், கொலையுண்ணவும், மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்திருக்கவும் வேண்டியது" என்று வசனித்தார். அவர் மெய்யானமனிதனா யிராவிடில் தமது மாம்சத்தில்பாடுபட்டு மரித்திருக்கமாட்டார். ஆ[illegible]ல், தெய்வீகத்தில் அவர்இவ்விதம் [illegible]டுபட்டு மரித்து அடக்கம்பண்ணப்பட முடியாது. அவர் மெய்யானதேவனாய் இராவிடில் தாம்மரித்து அடக்கஞ்செய்யப்பட்ட மூன்றாம்நாள் கல்லறைக்காவல்களும், மற்றும்சகலமும் வெகுவிழிப்புடன் பந்தோபஸ்தாயிருக்க, கல்லறையில் பதித்திருந்த முத்திரைஉடைபடாமல் அந்தப்படியேயிருக்கக் கல்லறையின் மூடி மூடியவண்ணம் ஓர்அங்குலம்தன்னும் அகலாதிருக்க, சூரியஒளியை மங்கடிக்கச்செய்யும் சோதிப்பிரபையுடன் செகசோதியாய், செயசீலராய், ஒட்டோலகராய், வெற்றிவேந்தராய்த் தாம்பாடுபட்டசிலுவையே தமது செயவிருதாய் மகிமைப்பிரதாபத்துடன் வல்லமையால் உயிர்த்தெழுந்திருக்கமாட்டார். இன்னும் கிறீஸ்துநாதர் மெய்யானசர்வேசுரனும், மெய்யான மனிதனும்என்பதை நூற்றுக்குநூறு வீதம் உண்மையெனஎண்பிக்க அவரின்பாடுகள்நிறைந்த சிலுவை மரணமும், மகிமையான உத்தானமுமே போதியசான்றுகளாகும். ஆனபடியாற்தான் பவுல்அப்போஸ்தலரும் "கிறீஸ்துநாதர் உயிர்த்தெழுந்திருக்கவில்லைஎன்றால், எங்கள் போதகமும் வீண், உங்கள்விசுவாசமும் வீண்" (1. கொரி. 15: 14.). என்று ஒரேயடியாய்முடிவுகட்டிவிட்டார். ஏனெனில், எந்தஒரு இறந்தமனிதனும் தன்சுயவல்லபத்தால் உயிர்த்தெழமுடியாது.

எனவே, அவர் எங்கள் நேசத்தின் பொருட்டுப் பாடுகள்மூலம் மகிமையில் பிரவேசித்ததுபோல, நாமும் அவரின் நேசத்தின்பொருட்டுப் பாடுகள்மூலம் மகிமையில்பிரவேசித்து மோட்சத்தில் அவருடன்ஒன்றித்து நித்தியானந்தராய்வாழ இயன்றமட்டும் வருந்துவோமாக! சுபம்

---

### வாழ்க்கைச் செலவுப்புள்ளி

இலங்கையிலே சென்றபங்குனி மாதம் வாழ்க்கைச்செலவுப் புள்ளித்தொகை 104·8எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. மூந்தியமாசிமாதப் புள்ளித்தொகை 105·8. மரக்கறி, தேங்காய், மாமிசம், வெற்றிலை, பாக்குஆதியவற்றின்விலை இறங்கினமையே சென்றமாதம் புள்ளித்தொகை குறையக் காரணமாகும்.

### மானிப்பாய் ஆஸ்பத்திரி

மானிப்பாயிலுள்ள கிறீன் ஆஸ்பத்திரியில் வைத்தியதொண்டாற்றுமாறு அனுபவமும், திறமையும்வாய்ந்த சத்திரவைத்தியரான டக்றர் ஏ. எஸ். ஏ. இராசசிங்கம், எவ். ஆர். சி. பி (லண்டன்) டி. ஆர். சி. ஓ. ஜி. (லண்டன்) நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார். சென்ற 31-நதிகதிமுதல் அங்குகடமை பார்க்கத் தொடங்கியிருக்கின்றார். இவர் கொழும்பு, அரசினர்பெரிய ஆஸ்பத்திரியில் வைத்தியசேவை ஆற்றியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## NOTICE

### MADHU FESTIVAL

The annual festival celebrated on the first Sunday in May has been advanced this year for the last Sunday in April, namely 27th April, 1958.

J. C. Selvaratnam, O.M.I.,
Administrator.

## TUITION
IN
### Shorthand-Typewriting and Music

**Shorthand :** Pitman's Phonetic System } Theoretical course and
**Typewriting :** Vertical Touch Method } Advanced Level

Students (boys and girls) prepared for Pitman's London, London Chamber of Commerce and other Examinations.

**Shorthand Speed Training a Speciality**

Several students already trained are in Govt. Service, Business Firms and other Institutions in Ceylon and India.

**Church Music :** English and Plain-Chant (Gregorian)

Individual attention paid to each student.

**JOSEPH ANDREW,**
"De Mazenod", 4th Cross Street, Jaffna.

## அந்தியகால அறிவித்தல்

**யாழ்நகர் கஷ்டநிவாரண பாதுகாப்புச் சங்கம் லிமிற்ரெட்**
**இல. 4. கண்டிரேட், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்—பதிவு இல. M. 110**

இதன்கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் அங்கத்தவர்கள் தேகவியோகமடைந்தமையால் அன்னவர்க்காகச் செலுத்தவேண்டிய நன்கொடைப் பணத்தைத் தேகவியோகமடைந்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்திவிடவும். தவறின் பிரமாணம் 2(2)ன்படி உரிமையை இழக்கவேண்டி வரும்.

(1) காலகதியடைந்தவர் இல: 2717.
காலகதியடைந்தவர் பெயர்: அ. தங்கம்மா.
விலாசம்: நிக்கதோமிஸ் லேன். திகதி: 20-3-58

(2) காலகதியடைந்தவர் இல: 2345.
காலகதியடைந்தவர் பெயர்: வ. நாகமுத்து.
விலாசம்: சண்டிருப்பாய் வடக்கு. திகதி: 21-3-58

கீழ்க்காணும் இருஅங்கத்தவர்களின் சாட்டுதலாளர்களுக்குப் பின்வருமாறு நன்கொடைப்பணமும், சந்தாப்பணமும் வழங்கப்பட்டன.

(1) 1207 — து. சின்னம்மா — றக்காரேட்.
நன்கொடைப்பணம் ரூபா 1468-25. சந்தாப்பணம் ரூபா 20-65.

(2) 446 — சு. றெபெக்கா — டேவிற்ரேட்.
நன்கொடைப்பணம் ரூபா 1467-19. சந்தாப்பணம் ரூபா 20-45.

த. இராசரத்தினம்,
கௌரவ காரியதரிசி.

# சமாதானத்திற்கு அணு

அணுவானது கொடிய காட்டுயானையைப் போன்றது. காட்டு யானையை மனிதன் கட்டுப்படுத்திப்பழக்கி வேலை வாங்குவதுபோல் அணுவையும் இப்போது விஞ்ஞானிகள் ஆக்கவேலையில் ஈடுபடுத்தி வருகிறார்கள்.

"சமாதானத்திற்கு அணு" என்ற கோஷமே இப்போது உலகமக்கள் அனைவரதும் வேண்டுகோளாகும். எங்கெங்கு உட்கரு அணுஉலைகள் ஏற்படுத்தப்படுகின்றனவோ அங்கெல்லாம் கதிரியக்க "ஐசோதோப்பு"களை உற்பத்திசெய்ய முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன. அணுவை ஆக்க சக்தியாகப் பயன்படுத்துவதற்கு ஐசோதோப்புகளை உற்பத்திசெய்வதே சிறந்ததென விஞ்ஞானிகள் முடிவு செய்திருக்கிறார்கள்.

அணுவிலிருந்து கதிரியக்க ஐசோதோப்புகளை உற்பத்திசெய்து, அவைகளை ஆராய்ச்சிக்கும், வைத்தியத்திற்கும், தொழில்துறைக்கும், வேறுபல நல்ல காரியங்களுக்கும் பயன்படுத்தலாம். அணுஉலைகள் மின்சாரசக்தி உற்பத்தி, உணவுப்பாதுகாப்பு, நோய் நிர்ணயம், நோய்ச்சிகிச்சை, நீர்மூழ்கிக்கப்பல், சாதாரணகப்பல், விமானங்கள் முதலியவைகளை இயக்குதல் முதலிய பல்வேறு ஆக்கவேலைகளில் பயன்படுத்தப்பட்டுவரினும், கதிரியக்க ஐசோதோப்புகளை உற்பத்திசெய்ய அணுவை உபயோகப்படுத்துவதே நாட்டுக்கும், நாட்டினருக்கும் அதிகநன்மை தரவல்லது என்று கருதப்படுகிறது.

கதிரியக்கமுள்ள ஒருவித ரசாயனப் பொருளைத்தான் கதிரியக்க ஐசோதோப்புகள் என்கிறோம். வைத்தியத்துறையில் நோய்களை நிர்ணயஞ்செய்யவும், நோய்களைச் சுகப்படுத்தவும் கதிரியக்க ஐசோதோப்புகள் இப்போது உபயோகிக்கப்பட்டு வருகின்றன. 1946-ம் ஆண்டு சுமார் 30 அமெரிக்க டக்றர்மார் ஐசோதோப்புகளைப் பிரயோகித்துவந்தனர். ஆனால், இன்றோ சுமார் 3,000 டக்றர்மார் அமெரிக்காவில் இவைகளை உபயோகித்துவருகின்றனர். அணுசக்தி ஆராய்ச்சியாளர்களுக்கும், டக்றர்மாருக்குமிடையில் அதிக கூட்டுறவு ஏற்பட்டுவருகிறது. வருங்காலத்தில்இந்த ஒத்துழைப்புஅதிகரிக்கும்அறிகுறிகள் தென்படுகின்றன.

நாம் உண்ணும் உணவிலிருந்து உடம்பிற்குக் கிடைக்கும் சக்தியைப் பெருக்கக் கதிரியக்க ஐசோதோப்புகளைப் பாவிக்கலாம். நமது உடம்பிலுள்ள இரத்தக் கோளாறுகளுக்கும், புற்றுநோய்களுக்கும் இவைகள் உபயோகமாகும். கண்நோய்களை நிர்ணயிக்கவும் ஐசோதோப்புகள் உபயோகமாகின்றன. சிலவித புற்றுநோயாளரின் உடம்பில் சீழ்வடிவதையும் கதிரியக்க ஐசோதோப்புகள் தடைசெய்கின்றன. இருதயநோய்களைக் குணப்படுத்தவும் இப்போதுஅவைகள் பாவிக்கப்படுகின்றன. வைத்திய ஆராய்ச்சித்துறைகளிலே கதிரியக்க ஐசோதோப்புகள்பெருமளவில் உபயோகமாகின்றன.

நமதுஉடம்பினுள் செல்லும் உணவு சீரணமாவதற்கிடையில் நிகழும் எல்லா நிகழ்ச்சிகளையும் இதுவரை விஞ்ஞானிகள் கண்டுகொள்ளவில்லை. உணவு எங்கெல்லாம் சென்று கடைசியில் சீரணமாகிறதென்றுதானும் கண்டுபிடிக்கவில்லை. தற்போது அவைகளைக் கண்டுபிடிக்கக் கதிரியக்க ஐசோதோப்புகள் உதவுகின்றன.

நாம் உண்ணும்உணவுடன் சிறு அளவு கதிரியக்க ஐசோதோப்பும் கலந்து உண்டால் இரத்த நாளத்தில் ஐசோதோப்புக் கலந்த நிணத்தைப் பாய்ச்சி, அந்தநிணம் இரத்தத்தோடு செல்லும் இடங்களையெல்லாம் வெளியிலிருந்து கண்டுபிடித்து விடுகிறாராம் டக்றர் ரெச்ஸ்ஹவுஸ் எனும் அமெரிக்க விஞ்ஞானி.

கண்டறியாத காரணங்களையும் கண்டறிய ஐசோதோப்புகள் உதவி செய்யலாமென்று டக்றர்மார் நம்புகின்றனர். அதற்கான நோய்நிர்ணயத்துறையில் ஐசோதோப்புகள் பாவிக்கப்பட்டுவருகின்றன். அவ்வுணவு செல்லும்போதே ஒருவகை ஒளிச்சுடர் கிளம்பிக்கொண்டிருக்கிறதாம். கேய்க்கர் கருவிமூலம் அவ்விடங்களைக் கண்டுபிடிக்கலாமென்று டக்றர்மார் கூறுகின்றார்கள். இரத்தவோட்ட ஆராய்ச்சியிலும் இப்போது கதிரியக்க ஐசோதோப்புகள் பாவிக்கப்படுகின்றன.

## அறிவித்தல்

**மருதமடுப்பதிவிழா**

வழமைப்பிரகாரம் வைகாசிமாதத்தின் முதலாம் ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படுகின்ற வருடாந்த விழா, இவ்வாண்டு சித்திரைமாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமை (27-4-1958) கொண்டாடப்படும்.

J. C. Selvaratnam, O. M. I.
மருதமடுப்பதிப்பரிபாலகர்

● கனடாதேச மொண்றியல்நகரிலே திருச்சிலுவைச் சபையைச் சேர்ந்தவரான அந்திரே பிறதரால் 1904-ம்ஆண்டு அடியிடப்பெற்ற அர்ச். சூசையப்பரின் உலகப்பிரசித்திபெற்ற திருசேத்திரத்தில் சென்ற பங்குனிமாதம் 19-ந்திகதி புதன்கிழமை அவர்திருநாளன்று நிகழ்ந்த கொண்டாட்டங்களில் கருதினல் லெஜர்ஆண்டவரும், ஆறு அதிமேற்றிராணிமாரும், ஐந்து மேற்றிராணிமாரும் கலந்துகொண்டார்கள்.

● லூர்துபதியிலே வருகிறபுரட்டாசிமாதம் நிகழவிருக்கின்ற சர்வதேச மரியாயின்மகாநாட்டுக்குத் தம்முடையபிரதிநிதியாகப் பரிசுத்தபாப்பரசர் கருதினல்மார்திருச்சங்கதலைவரான கருதினல்திசறுண்ஆண்டவரை நியமனஞ்செய்திருக்கின்றார். தற்போது 74வயதுடையவரான கருதினல் திசறுன்ஆண்டவர் ஓர்பிரான்சியராவர்.

## புதியகோவில் திறப்புவிழா

சென்ற 23-3-58 ஞாயிறுவாரம்கரம்பன், மெலிஞ்சிமுனைமக்களின் சமய வாழ்க்கைச் சரித்திரத்தில் மகிழ்ச்சிக்குரிய ஓர்புதிய அத்தியாயம் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்படலாயிற்று. அன்றுபிற்பகல் 4-30மணியளவில் இவ்வூர்க்கிறீஸ்துவர்கள் யாவரும் மலர்ந்தமுகத்துடன் எமது கட்டளைக்குரவர் வண. எம். எஸ். நல்லையா சுவாமியவர்களை ஊரின்எல்லையிலிருந்து அலங்கரிக்கப்பட்டிருந்த வீதியூடாக ஊர்வலமாக அழைத்துச் சென்று புதியகோவில் முன்றிலிலே எல்லோரும் திரண்டிருக்க, அவர் கோவிலின் வெளிமுற்றத்தில்நின்று, "தேவப்பிரசைகளான இஸ்றயேல்மக்கள் மோசேசினல் வழிநடத்தப்பட்டு வாக்குத்தத்தப்பூமிக்குச் சென்றதையும், அவர்கள் பிற்பாடு அப்புண்ணிய பூமியிலே சலமோன்இராசாவின் தலைமையில் ஓர்தேவாலயத்தைக் கட்டியெழுப்பி ஆராதனைவழிபாடு நடத்திவந்ததையும், ஆவ்விதமே இவ்வூர்மக்களும தங்களுக்கென ஒருசிற்றாலயத்தை அமைத்துக்கொண்ட வரலாற்றையும் எடுத்துக்காட்டிச் சுருக்கமாகப் பேசினர். அதன்மேல் பரிசாரகர்களுடன் கோவிலுள் பிரவேசித்துத் திருஉடுமானங்கள்தரித்து வெளிகொண்டுவந்து அதன்சுற்றுப்புறங்களையும், உட்புறத்தையும் ஆசீர்வதித்தபின் புதியகோவிலின் கதவுகளைத்திறந்துவிடவே எல்லோரும் உட்சென்றனர். திவ்வியபூசைஆரம்பமானது. எம்பெருமானும் முதன்முறையாக மெலிஞ்சிமுனைச்சிற்றாலயப் பலிபீடத்தில் வந்திறங்கினர். மக்கள் எல்லையற்ற ஆனந்த வெள்ளத்தில் அமிழ்ந்தினர். பரலோகத்திலிருந்து வந்திறங்கிய பரமனைஉட்கொண்டு பரவசமடைந்தனர். பூசையின்பின் சற்பிரசாதஆசீர்வாதம்அருளப்பட்டு விழாஇனிது நிறைவேறியது.

இ. அ. பொ.

## பெற்றோர் தினவிழா

சென்ற 22-3-58 சனிக்கிழமை பிற்பகல் வண. கட்டளைக்குரவர் எச். மொறேசுவாமியவர்கள் தலைமையில் வலைப்பாடு, சந்தாளுள்பாடசாலைப் பெற்றோர்தினவிழா சிறப்புடன் நடைபெறலாயிற்று. முதல்நாள் பாடசாலைப் பிள்ளைகளிடையே விளையாட்டுப் போட்டிகள் சுவாமியவர்களின் மேற்பார்வையில் அயற்பாடசாலைஆசிரியர்களின் உதவியோடு நடந்தேறின.

சனிக்கிழமைமாலை 6-30மணிக்குப் பாடசாலைக்கு அருகாமையில் மின்சார வெளிச்சங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த மேடைமீது தலைமைஆசிரியர் திரு. வி. எஸ், ஜேம்ஸ்அவர்களின் வரவேற்புரையுடன் விழாஆரம்பமாயிற்று. தூரமான அயற்கிராமங்களிலிருந்தும் திரளானமக்கள் சமூகமளித்திருந்தார்கள். விளையாட்டுப்போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்மாணவிகளுக்கு சுவாமியவர்களால் பரிசில்கள் வழங்கப்பட்டதும் அவர்பெற்றோர் தங்கள் பிள்ளைகளை ஒழுக்கசம்பந்தமான கல்வியிலும், கடவுள்பக்தியிலும் மேம்படச்செய்ய வேண்டுமென நன்மதியுரைத்து, அதற்குஉதாரணமாகக் கிரேக்கஞானி சொக்கிறற்றிஸைப்பற்றிய சிலகுறிப்புகளை எடுத்துக் கூறினர்.

அவரைத்தொடர்ந்து பெற்றாரின் சார்பாகக் கிராமச்சங்கஅங்கத்தவர் எஸ். இசிதோர் நன்றியுரை கூறினர். ஈற்றில் பாடசாலைச்சிறுவர் 4மணித்தியாலங்களாகப் பலவிதநடனங்களையும், 'பைத்தியக்காரன்' என்னும் சமூகசம்பந்தமான நடித்தலையும், யூடித் அல்லது தளபதிஒலபோணஸ்என்னும் சமயசம்பந்தமான நாடகத்தையும் யாவரும் பாராட்டும்படியாக நடத்தியதும் விழாஇனிது முடிவடைந்தது.

—நிருபர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரித்தானிய பிரதமர்கள் பாப்புமாரைப்

## பேட்டி கண்டிருக்கிருர்களா ?

பிரித்தானியபிரதமர்களில் எவராவது பாப்புமாரைச் சந்தித்திருக்கிருர்களா? ஆம். அவர்களில் முதன்முதலாகப் பாப்பானவர்ஒருவரைச் சந்தித்தவர் சேர் வின்ஸ்றன் சேர்ச்சில்அவர்களே. இவர் பிரித்தானியநிதிமந்திரியாய் இருந்தபோது முதன்முதலாக 1927-ம்ஆண்டு 15வயதுடையவராயிருந்த தமதுபுதல்வர் ரூன்டல்வ்என்பவருடன் வத்திக்கான் மாளிகைசென்று 11-ம்பத்திநாத பாப்பானவரின் பேட்டிபெற்றுக் கொண்டார். அப்போது பாப்பானவரும், எதிர்காலபிரதமரும் 25நிமிஷங்கள்வரை தம்முளே சம்பாஷணைநடத்தினர். அதன் மேல்அவர் தமதுபுதல்வரைப் பாப்பானவருக்கு அறிமுகஞ் செய்துவைத்தார். அவரும் தந்தையும், மைந்தனுமாகிய இருவரையும் ஆசீர்வதித்தார். கத்தோலிக்கர் அல்லாதஒருவர் அப்போஸ்தலிக்கஆசீர்வாதம் விரும்பிக்கேட்கும்போது அதை அருளுவது பாப்புமாரின் வழக்கமாகும்.

சேர்வின்ஸ்றன் சேர்ச்சில் பிரித்தானியபிரதமராய் இருந்தபோது 1944-ம்ஆண்டின் ஆவணிமாதத்தில் இரண்டாம்முறையாக வத்திக்கானைத்தரிசித்தார். இம்முறைஅவர் தற்போதைய 12-ம் பத்திநாதபாப்பரசரையே சந்திக்கலாயினர். இந்தப்பிரத்தியேக பேட்டி வழமைக்குமாருக 45 நிமிஷங்கள்வரை நீடித்திருந்தது. அதற்குமுக்கியகாரணம் அப்போது இரண்டாதுஉலகயுத்தம் முடிவுக்குவந்துகொண்டிருக்கக் காணப்பட்டமைதானென்று சொல்லப்படுகிறது. இம்முறை பிரதமர் தமதுபுதல்வரைத் தம்முடன் அழைத்துச்செல்லவில்லை. ஆனால், புதல்வர் அதற்குமுந்திய ஆனிமாதத்திலும், பிந்த 1946-ம் ஆண்டின் ஆனிமாதத்திலும் வத்திக்கான்சென்று பாப்பரசரின்பேட்டி பெறலாயினர். இவர் 15வயதுடையவராய் இருந்தபோது பாப்பரசின்சின்னங்களைக் கொண்டதாய் 11-ம்பத்திநாத பாப்பானவரால் தமக்குஅன்பளிப்புச்செய்யப்பெற்ற பதக்கத்தை இன்னுமேபேணிவைத்திருக்கின்ருர்.

சேர்வின்ஸ்றன் அவர்களைத் தவிர, மற்றும் இருபிரித்தானிய அரசியற்தலைவர்கள் பிரதமர்களாயிருந்தபோது வத்திக்கானைத் தரிசித்திருக்கின்ருர்கள். இவர்களில் திரு. ரும்சே மைக்டனல்ட்அவர்கள் 1933-ம்ஆண்டு அங்குசென்ருர். இவரைத்தொடர்ந்து 1939-ம்ஆண்டு தைமாதம் 13-ந்திகதியன்று திரு. நேவில் சேம்பர்லின்அவர்கள் வெளிநாட்டுமந்திரியான ஹலிபாக்ஸ்பிரபுவுடன் சென்று 11-ம்பத்திநாத பாப்பானவரைப் பேட்டிகண்டார். இருவரையும்பாப்பானவர் தமது புயங்களால் அணைத்துக் கொண்டு தம்முடையஅறையைச் சூழவரக்காண்பித்து, தாம்அரும் பொக்ஷங்களாகப் பேணிவரும் படங்களை அவர்களுக்குக்காட்டினுர். அவற்றுள்ஒன்றிலே தாம் அர்ச்சியசிட்ட பட்டஞ்சூட்டிய கருதினல் சென்ஜோண் பிஷர், சென்தோமஸ் மோர்என்பவர்களின்பிரதிமைகள் இருக்கக் காணப்பட்டன. பேட்டிமுடிவிலே பாப்பானவர் அவர்கள் இருவருக்கும் தமதுஆளுகையின் 14-வதுவருடஞாபகார்த்த தங்கப் பதக்கங்களை அன்பளிப்புச்செய்தார். இவற்றில் முன்சொன்ன இருஅர்ச்சியசிட்டவர்களினதும் சாயல்கள் அமைந்திருந்தன.

## அர்ச். 10-ம் பத்திநாதரின் மகாதேவாலயம்

உலகின் இரண்டாவதுமகாப் பெரிய ஆலயமாய் லூர்துபதியிலே நிலமட்டத்தின்கீழ் நவமாகக் கட்டியெழுப்பப்பெற்ற அர்ச். 10-ம் பத்திநாதரின் மகாதேவாலயமானது பாப்பரசரின் பதிலாளியாக நியமனஞ்செய்யப்பெற்றுச்சென்ற வெனிஸ்நகர பத்திறியாக்குவான கருதினல் ரொங்கலி ஆண்டவரால் மாதா மங்களவார்த்தைகேட்ட திருநாளாகிய சென்ற பங்குனி மாசம் 25-ந்திகதியன்று அபிஷேகஞ் செய்யப் படலாயிற்று. இற்றைக்குச்சரியாய் நூறுவருடங்களின் முன் அன்றுதினமே பெர்னதெத் அம்மாளின் கேள்விஒன்றுக்குத் தேவதாயார் அளித்தபதிலில், "நாமே அமலோற்பவம்" எனத் தெரிவிக்கலாயினுர். திருச்சபையின் மிகநீண்ட திருவைபவங்களில்ஒன்ருகிய இந்தஅபிஷேகதிருவைபவம் முதனுளே திருச்செபமாலை மகாதேவாலயத்தில் அர்ச். 10-ம்பத்திநாதரது திருப்பண்டங்களின் திருவிழிப்பு வணக்க வழிபாட்டுடன் ஆரம்பமானது. அபிஷேகதினமன்று காலை பாப்பரசரின் பதிலாளியான கருதினுல்அவர்கள் லூர்துபதிமேற்றிராணியார், துணைமேற்றிராணியார், 26 அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார் சமேதராய்த் திருப்பண்டங்களையும் எடுத்துக் கொண்டு வாதுமைவித்துப்போலும் உருவமாயமைந்த புதிய மகாதேவாலயத்துக்கு ஊர்வலமாகச்சென்று திருவைபவங்களை மூன்றரை மணித்தியாலங்களாகப் பக்தியருட்சிக்குரியவிதமாய்த் தொடர்ந்து நடத்திமுடித்தார். அர்ச். 10-ம் பத்திநாதருடையது ஒன்றுஉட்பட அர்ச்சியசிட்டர்களின் திருப்பண்டங்கள்பல ஆசீர்வதிக்கப்பெற்ற பலிபீடத்துள் வைத்து முத்திரையிடப்பட்டன. 656 அடி நீளமும், 260 அடி அகலமும், 20,000 மக்கள் நிற்கக் கூடியதுமான இந்தப்பெரியமகா தேவாலயதளமானது மத்தியில் அமைந்துள்ள பலிபீடத்தைமெல்லெனச்சரிவாய் இறங்கிக் கொண்டுபோவதால் பீடத்தில் நடக்கும் திருச்சடங்குகளை எவரும் தெளிவாகக் கண்டுகொள்ளலாம்.

—(⌒)—

## லூர்துபதியும் திருயாத்திரிகர்களும்

நூற்ருண்டுவிழாவை முன்னிட்டு லூர்துதிருப்பதிசெல்லும் யாத்திரிகர்கள் அங்குமுக்கியமாக ஈடுபடும் பக்திமுயற்சிகளும், பிறவும் எவையென்று பின்வருமாறுஎடுத்துக் கூறப்படுகிறது. திவ்வியநற்கருணைச் சுற்றுப்பிரகாரம், நோயாளரை ஆசீர்வதிக்கும்சடங்கு, திருக்கெபியைநோக்கி ரோச்லைற், மெழுகுவர்த்திச் சுற்றுப்பிரகாரம், அர்ச். பெர்னதெத்அம்மாளின் இல்லதரிசனை, அற்புதஊற்றுநீரில் குளிப்பது, மசபியெல் குன்றின்மீதுள்ள சிலுவைப்பாதைஸ்தலங்களைச் சந்திப்பது, மகாதேவாலயத்தில் திவ்வியபூசைகாண்பது, செபமாலை சொல்லுவது, அதனைப்பிரத்தியேகமாகச் சந்திப்பது, அர்ச். பெர்னதெத்அம்மாளின் சமுகத்திலேயே திறக்கப்பட்ட நிலவறைக் கோவிலில் — அதாவது தேவதாயாரது வேண்டுகோளின்பேரிலே கட்டப்பெற்ற முதலாவதுகோயிலில் திருவிழிப்புஆராதனை என்பனவே. ஆகாயவிமானங்களில் அங்குசெல்லும் யாத்திரிகர்கள் 27மணித்தியாலத்தில் இவைகளையெல்லாம்முடித்துத் திரும்புகின்ருர்கள்.

---

## இருபத்தைந்து ஆண்டுகளுக்குமுன்

பெல்ஜியத்திலே போறேங்பட்டினத்தில் தேவதாயார் ஐந்துபிள்ளைகளுக்குக் காட்சியளித்த 25-ம் ஆண்டுநிறைவுவிழா சமீபத்தில் கொண்டாடப்பட்டபோது, அந்நாடுமுழுவதிலிருந்தும், அயல்நாடுகளிலிருந்தும் பெருந்திரளானயாத்திரிகர்கள் அத்திருசேத்திரத்தில் ஒன்றுகூடினுர்கள். அவர்கள்மத்தியிலே தற்சமையம் வளர்ந்து ஆடவர்களும், பெண்மணிகளுமாயிருக்கும் அல்பேட் பேர்ளுண்டோ, ஜில்பேட் வொய்சன், அன்ட்றீ, ஜில்பேட், ஜெயிம்பர் எனும் "அந்தப்பிள்ளைகள்" தங்கள்சொந்தப்பிள்ளைகளுடன் சமுகமளித்திருந்தார்கள். 1932-ம்ஆண்டு கார்த்திகை மாதத்துக்கும், 1933-ம்ஆண்டு தைமாதத்துக்குமிடையில் தேவதாயார்அநேகம்முறை அவர்களுக்குத் தரிசனையானுர். பாவிகளுக்காக உங்களைப் பரித்தியாகஞ் செய்யுங்கள் ; உலகின்மனந்திரும்புதலுக்காகச் செபஞ்செய்யுங்கள் ; எனது திருக்குமாரனையும் என்னையும் நேசியுங்களென்று அத்தரிசனைகளின்போது அவர்களுக்கு அவர்கூறலாயினர். ஓர் தரிசனையின்போது அவர் தமது மார்பிலே தம்முடையபுயங்கள் குறுக்காகமடித்து விரித்தபடியிருக்க, பிரபைக்கதிர்களால் சூழப்பெற்ற ஓர்தங்கஇருதயத்தை அவர்களுக்குக் காண்பிக்கலாயினுர். இதைமுன்னிட்டுத்தான் சிலதருணங்களில் அவர் தங்கஇருதயமாதாஎன்று அறியப்படுகின்ருர்.

---

## திருசேத்திரங்களுக்கு யாத்திரை

52வயதுள்ள நெல்லி நோயர் எனப்பெயரிய ஓர்உலாந்தமாது சென்ற 1957-ம்ஆண்டு மாசிமாதம் 2-ந்திகதிமுதல் ஐரோப்பிய திருசேத்திரங்களுக்குக் கால்நடையாக ஓர்யாத்திரைசெய்து வருகின்ருள். இவளுடையயாத்திரை இன்னுஞ்சில வாரங்களிலே பாத்திமாவில் முடிவடையவிருக்கின்றது. உலாந்தஇளவரசிமார் கறேற் பூரணகண்பார்வைதிரும்பவும் அடையவேண்டுமென்பதே இவளுடைய யாத்திரையின் நோக்கமாகும். ஏற்கனவேலூர்துபதி, மொண்செருத்திலுள்ள மாதாவின்திருசேத்திரம் ஆதியவைகளை இவள் கால்நடையிலே தரிசித்துவிட்டாள். தற்போதுஇவள் பாத்திமாபதி போய்ச்சேர இன்னுஞ் சுமார் 200 மைல் நடக்க வேண்டியிருக்கிருள். பாத்திமாவிலிருந்து இவள் புகைவண்டி மார்க்கமாகத் தனது சுவநாட்டிற்குத் திரும்புவாள்.

---

## சர்வதேச சற்பிரசாத மகாநாடு

37-வது சர்வதேச சற்பிரசாத மகாநாடு மூனிச்நகரிலே 1960-ம் ஆண்டு ஆடிமாதம் 29-ந்திகதி முதல் ஆவணிமாதம் 5-ந்திகதி வரை எட்டுத்தினங்களாக நடந்தேறவிருக்கின்றது. இந்தமகாநாட்டின்விஷயம் "உலகின்வாழ்விற்காக"என்பதே. அதிலே இம்சித்துத் துன்புறுத்தப்படும் திருச்சபைக்காக விசேஷபக்தி முயற்சிகள் நடைபெறும். முடிவுதினத்துக்குமுதனுள் நடந்தேறும் மாபெரும் மெழுகுவர்த்திச்சுற்றுப்பிரகாரம் அதன்வைபவங்களில் மிகவிசேஷப்பட்டதாயிருக்கும். ஜேர்மனியில் நடக்கும் இரண்டாவதுசர்வதேச சற்பிரசாதமகாநாடு இதுவாகும். முதலாவதுமகாநாடு கொலோன் நகரில் 1909-ம்ஆண்டு நடைபெறலாயிற்று. கடைசியான 36-வது சற்பிரசாதமகாநாடு பிறேசில் நாட்டின் தலைப்பட்டணமாகிய றியோடிஜனேய்ரோநகரில் நிகழலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சித்திரை மாதம்

**பொதுக்கருத்து:** சற்பிரசாதத்தைப்பற்றிய அறிவுபெருகி அதன் வழியாகச் சிறுவர் அதிகமதிகமாகக் குருத்துவத்தை மேற்கொள்ளுமாறு வேண்டிக்கொள்வது.

**மிஷன்கருத்து:** இலங்கையிலே திருச்சபை நாளடைவில் அதிகமதிகம் மதிப்புப்பெறும்படியாக மன்றுடிக்கொள்வது.

சத்திய வேத

## பாதுகாவலன்

1958-ம் ஆண்டு
சித்திரைமாதம் 10-ந் திகதி

# சமாதானமும் அமைதியும் நிலைபெறவேண்டுமா ?

"தமிழர்களின் சரித்திரத்திலேயே இன்று மிகவும்நெருக்கடியானநிலை ஏற்பட்டுள்ளது; இந்த நெருக்கடியின் அபாயத்தை எமதுமக்கள் உணர்ந்துகொள்ளுகிறார்களில்லை; இந்தநெருக்கடியான சந்தர்ப்பத்திலே தமிழ்மக்கள் ஒருங்குதிரண்டு ஐக்கியமாக இருக்கவேண்டும்; பலனளிக்காத எவ்விதநடவடிக்கைகளிலும் அவர்கள் இச்சமயத்தில் ஈடுபடக்கூடாது தங்களுக்குள்ளேயே இருந்துவரும் ஐந்தாவது படையினரையிட்டுத் தமிழ்ப் பேசும்மக்கள் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும்; தமிர்கள் கடந்தகாலத்திலும் பெருஞ்சோதனைகளுக் குட்பட்டு இறுதியிலே வெற்றிபெற்றுள்ளார்கள்; இதேபோன்ற துணிவுடன் இன்றுஏற்பட்டுள்ள நெருக்கடியிலும் தமிழ்ப்பேசும்மக்கள் வெற்றிபெறுவார்களென்பது எனதுதிடமானநம்பிக்கை" என அன்றுநிகழ்ந்த பரிசளிப்புவிழா ஒன்றில் பிரபல பேராசிரியர் ஏ. டபிள்யு. மயில்வாகனம்அவர்கள் கூறியிருக்கின்றார்.

"தமிழர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதிகளையும், அக்கிரமங்களையுமிட்டு ஓர்சிங்களவர் என்றமுறையில் எனது அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, மன்னிப்பும் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்; சேர் பொன்னம்பலம் இராமநாதன், சேர் பொன்னம்பலம் அருணசலம், சேர் வைத்தியலிங்கம் துரைசாமி போன்ற தமிழ்ப்பெரியார்களுடன் எனதுதந்தையார் தோளோடுதோள்நின்று போராடியவர்; அவர்வழியில் தோன்றிய நான் ஒன்றுசொல்ல விரும்புகிறேன்; தமிழர்களுக்குப் பூரண நீதி வழங்கப்படவேண்டும்; தமிழர்களுக்குச் சிங்களவர்களின் ஆதரவும், சிங்களவர்களுக்குத் தமிழர்களின்ஆதரவும் அவசியம்தேவை" என அன்று யாழ்ப்பாணத்தில்நிகழ்ந்த ஓர் கூட்டத்திலே திரு. ஜே. தேவசூரியசேனஎன்ற சிங்களப்பிரமுகர் பேசியிருக்கின்றார்.

"தமிழர்கள் இந்நாட்டின் சிறுபான்மைச் சமூகத்தவர்களாக இருக்கின்றார்கள்; அவர்களை நாங்கள் கொல்லவோ, அன்றேல் வேறுநாட்டுக்குத் துரத்தவோ முடியாது; நாம்அவர்களுக்கு இந்நாட்டில் அவர்களுக்குரிய இடத்தைக் கொடுக்கவேண்டும்; ஆட்சியிலிருப்பவர்கள் சிறுபான்மைச் சமூகத்தினருடன் அந்நியோன்னியமாக ஆதரவளித்து வாழவேண்டும்; ஒரு நாட்டிலுள்ள சிறுபான்மைச் சமூகத்தினரின் மொழி, பண்பாடுமுதலியவைகளை அந்நாட்டிலுள்ள ஏனையசமூகத்தினர் பாதுகாக்கவேண்டுமென்பது புத்த பெருமானின் போதனையாகும்" என அன்றுநடைபெற்ற சிங்களவர்கூட்டம்ஒன்றில் காணிஅபிவிர்த்தி மந்திரி சி. பி. டி சில்வா உபதேசஞ்செய்திருக்கின்றார்.

கலகம்பிறந்தால் நியாயம்பிறக்கும். ஞானம் உதயமாகும். ஆனல், எவ்விதநியாயம் பிறந்துமென்ன! எத்தகைய ஞானம் உதயமாகியுமென்ன! "சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்குச் சகலசமூகத்தினரும் ஒத்துழைக்கவேண்டும்; நாட்டின்நலனைக் கருத்திற்கொண்டு மக்களிடையேமறுபடியும் நல்லெண்ணத்தையும், நல்லுறவையும் உருவாக்கிவளர்க்கும் நோக்கத்தோடு கட்டுப்பாட்டுடனும், பொறுமையுடனும் நடந்துகொள்ளவேண்டு"மென்று பிரதமர்பண்டாரநாயகா அபயமிட்டுமென்ன! இன்றுநாட்டில் ஏற்பட்டுள்ள கலவரங்களுக்கு மூலகாரணமாயுள்ளவைகள் நீங்காவிடத்து இவற்றல் யாதுபலனும் உண்டாகப்போவதேயில்லை. யாழ்ப்பாணத்திலே சிங்களஸ்ரீ எதிர்ப்புஇயக்கம் ஆரம்பமானது. போக்குவரத்துச்சபைப் பஸ்களில் தமிழ்ஸ்ரீ பொறிக்கப்பட்டது. இதன்விளைவாகக் கண்டதென்ன? தமிழின் — தமிழ்எழுத்துகளின் — இல்லை, தமிழர்சமூகத்தின் தலைக்கறுப்புத்தானும் காணப்படாது; காணப்படின் அவைகள் தார்க்கறுப்பாகவேண்டுமென்பதைச் சாதனைமூலம் அவர்கள் காண்பித்துவிட்டார்கள். தமிழர்கள் தங்கள்உரிமைக்காகத்தமிழ்ஸ்ரீயைப் பொறித்தார்கள். ஆனல், எந்த உரிமைக்காகச் சிங்களவர் தமிழ் எழுத்துகள்மீது தார் பூசவேண்டும். ?

தமிழர் — சிங்களவரின் ஐக்கியத்தைக்கெடுத்து, அவர்களிடையே குரோதத்தையும், வகுப்புவாதத்தையும் உண்டுபண்ணிவிட்டதென்ன? முந்த அதனைக் கண்டறிந்து நீக்கவேண்டும்? அன்றேல் மீட்டும் புதிதுபுதிதாக, ஒன்றின்பின் ஒன்ருகச் சங்கடங்கள் எழுந்துகொண்டேயிருக்கும். அன்றுவந்தது பொதுத்தேர்தல். எழுந்தது தனிச்சிங்களகோஷம். இதையிட்டுப் பிறந்தது எம் ஈ. பி. — யு என். பி. கட்சிகளிடையே போட்டிஆவேசம். பாராளுமன்றத்திலே முன்பின்யோசனையில்லாது அவசரம்அவசரமாகத் தனிச்சிங்களசட்டம் அரங்கேறியது. பெருந்தவறு இழைக்கப்பட்டது. தமிழர் - சிங்களவர் ஐக்கியம் குலைந்தது.

இலங்கை மக்களிடையே இன்றுஒற்றுமை நிலவவேண்டியது மிகவும்அவசியம். ஒற்றுமைமூலமே நாம் வெற்றிபெறலாமென்று பிரதமர் பண்டாரநாயகா பரிந்து கூறுகின்றார். ஆனல், இந்த ஒற்றுமை ஏற்படுவது இன்றைய நிலைமையில் அசாத்தியமாகும். அவர் தமிழ மொழியை ஒதுக்கியபோதே தமிழரையும் ஒதுக்கிவிட்டாரென்றசிந்தனை தமிழரின் உள்ளங்களில் பதிந்துவிட்டது. பெரும்பான்மைச் சமூகத்தினரிடம் அன்னருக்கிருந்தநம்பிக்கை பிறழ்ந்துவிட்டது. தமிழுக்குச் சமஅந்தஸ்து என்பது தமிழருக்குப் புதியதோர் சலுகையல்ல. இது அவர்களின் பழைய உரிமையேயாகும். அங்ஙனமாக, இன்று நாட்டில் அமைதியை நிலைநாட்ட என்செய்வதென்று பொறுப்புவாய்ந்த பலரும் கவலையுடன் யோசிக்கின்றார்கள். ஆனல், அவர்கள் சிந்திக்கவேண்டியது இதுதான். தனிச்சிங்கள சட்டமே இந்நாட்டில் வகுப்புக் கலவரங்களை உண்டுபண்ணியது. இரத்தஞ்சிந்தப்பண்ணியது. இந்தச் சட்டம் தோன்றியிராவிடின் இந்நாட்டில் தமிழ்மக்கள் சிங்களமக்களுடன் வகுப்புத்துவேஷமின்றிச் சகோதரமனப்பான்மையுடன் முன்போல வாழ்ந்துவந்திருப்பார்கள். தனிச்சிங்களசட்டம் இருக்கும்வரை வகுப்புக் கலவரங்களும், இரத்தப்பிரவாகமும் காலந்தோறும் தலைகாட்டிக்கொண்டேயிருக்கும். தார் பூசியுமென்ன? தமிழ் எழுத்துகளை அழித்துமென்ன? அவைகள் நீங்கப்போவதேயில்லை.

# சுதேச வர்த்தமானம்

### இலங்கை வானொலியில் கத்தோலிக்க நிகழ்ச்சி

13-4-58 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 10 மணி வரையும் திரு. அருளானந்தம் யேசுதாசன் அவர்களால் தயாரிக்கப்பட்ட விசேஷ நிகழ்ச்சி இலங்கை வானொலி, தேசிய ஒலிபரப்பியில் நடைபெறும். "சீவியபாதை" என்ற நாடகமானது கட்டுரைகள், கத்தோலிக்க புதினங்கள், பாட்டுக்கள் அடங்கிய நிகழ்ச்சியாயிருக்கும்.

### பங்குனிமாதமும் கொலைகளும்

பொலிஸ் தலைமைஸ்தானக் கணக்கின்படி இலங்கையிலே சென்றபங்குனிமாதத்தில் 48கொலைகள் நடந்திருக்கின்றன. இவற்ரோடு இவ்வருடத்தின் முதல்மூன்றுமாதங்களிலும் இலங்கையில் நிகழ்ந்தகொலைகள் 129. சென்றமாதம் நிகழ்ந்துள்ள விபத்து மரணங்கள் 27. இவற்றுடன் மூன்று மாதங்களிலும் 73விபத்துமரணங்கள் நேர்ந்திருக்கின்றன.

### வானொலிக்கான பாட்டுகள்

இலங்கை வானொலிக்கான பாட்டுகளையும், ஏனையநிகழ்ச்சிகளையும் பதிவுசெய்வதற்காக யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆதியாம் பகுதிகளிலிருந்து இனிமேல் எவரும் கொழும்புக்குப் போகவேண்டியதில்லை. இலங்கை வானொலியைச்சேர்ந்த ஒலிபதிவுசெய்யும்அதிகாரிகள் இனிமேல்முன்சொன்ன இடங்களுக்குச்சென்று பாட்டுகளையும், நிகழ்ச்சிகளையும் பதிவுசெய்வதற்கான ஏற்பாடுகளை வானொலிப்பகுதி செய்துவருகிறது. இதற்கென 75,000 ரூபாசெலவில் ஓர் மோட்டர்வானும், ஒலிபதிவுசெய்யும் உபகரணங்களும் வாங்குவதற்கானஒழுங்குகள் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளன.

### தமிழிலே தந்திகள்

இலங்கையிலுள்ள முக்கியமான தபாற்கந்தோர்கள் எல்லாவற்றிலுமிருந்து தமிழிலே தந்திகள்அனுப்புவதற்கான ஏற்பாடுகள்செய்யத் தான் மிகுந்தகரிசனை கொண்டிருப்பதாகவும், ஆனல், முக்கியமான சிலகாரணங்களைமுன்னிட்டு அவ்வாறுசெய்ய முடியாதிருப்பதாகவும் தபால் — வானொலிமந்திரி அறிவித்திருக்கின்றார். முக்கியமாகத் தந்திகள்அனுப்புவதற்கான பரிபாஷைச்சொற்கள் தமிழில் இல்லாமையே தமிழ்த்தந்திகள்அனுப்பத் தடையாயிருந்துவருவதாக அவர் தெரிவித்திருக்கின்றார்.

### கல்லோயாவும் வெள்ளச்சேதமும்

கல்லோயாப் பள்ளத்தாக்கில் ஏற்பட்டுள்ள வெள்ளச்சேதம் 50,53,880 ரூபாவெனத் தற்போது மதிப்பிடப்பட்டிருக்கிறது. அங்குசமீபத்தில் குடியேற்றப்பட்ட பகுதிகளில் 800ஏக்கர் நெல்வயல் முற்றுகச் சேதமடையலாயிற்று. கல்லோயாச்சபையின் ஆதிக்கத்துக்குட்பட்ட இருகிராமங்களில் 3,914ஏக்கர் சேதமடைந்திருக்கிறது. இவற்றின்விளைவாகக் கல்லோயாப் பள்ளத்தாக்குநெல்விளைவு 1,54,590 புசலால் குறைந்திருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. அங்கு கரும்புச் செய்கையும் மோசமாகச் சேதமடைந்துள்ளது. இந்தச்சேதமதிப்பு இரண்டு லட்சம் ரூபாவாகும். யந்திரசாதனங்களுக்கு ஏற்பட்டசேதமதிப்பு 13,34,650ரூபாவாகும்.

### தமிழ்உபயோக சட்டம்

பிரதமரது அழைப்பின்பேரிலே தமிழரசுக்கட்சித் தலைவர்கள் சென்ற 3-ந் திகதியன்று அவரைச்சந்தித்தபோது, பிரதேசசபைச் சட்டத்தையும் (மசோதா), நியாயமான தமிழ்உபயோக சட்டத்தையும் சமர்ப்பிப்பதில் காலதாமதம் ஏற்படுவதையிட்டுத் தமிழ்ப்பேசும் மக்கள் அதிருப்திகொள்வதாக அவரிடம் முறையீடுசெய்தனர். அதற்குப் பிரதமர் இந்தச்சித்திரைமாத இறுதியிலே பிரதேசசபைச்சட்டம் தயாராயிருப்பதற்கான சகலநடவடிக்கைகளையும், தமிழ்மொழிஉபயோக சட்டத்தையும் ஏறக்குறைய ஏககாலத்தில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகளைத் தாம்எடுத்திருப்பதாகத் தெரிவித்தாரெனத் தெரியவருகிறது.

### பூநகரி — கேரதீவுப்படகுப்பாதை

பூநகரிக்குக், கேரதீவுக்குமிடையே சிலகாலமாகப் படகுப்பாதை ஒன்று மட்டுமே வேலைசெய்கிறது. அதுவும் சிலசமையம் வேலைசெய்வதில்லை. அதனல் பொதுமக்கள் பெரிதுங்கஷ்டப்படுகிறார்கள். அதனல் இந்தப்படகுப்பாதை உடனேதானே திருத்தப்படவேண்டுமென்று யாழ்ப்பாணமேயரும், தமிழரசுக்கட்சிப் பிரமுகர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களும் முறையீடுசெய்துகொண்டதின்பேரில் உடனடியாக அதனைத் திருத்துவதற்கான நடவடிக்கைகளைப் போக்குவரத்துமந்திரி எடுத்திருப்பதாகத் தெரியவருகிறது.

### சிங்கள ஸ்ரீபஸ்கள்

வடமாகாணத்திலும், கொழும்பிலும் ஏற்பட்டுள்ளநிலைமையை ஆராய்ந்த பின்னர் வடமாகாணத்துக்குச் சிங்கள ஸ்ரீபஸ்களை இனிமேல்அனுப்புவதில்லையென்று அரசாங்கம் முடிவுசெய்துள்ளது. இந்தமுடிவைப் போக்குவரத்துச்சபைத் தலைவருக்கு அறிவிக்கும்படி போக்குவரத்துமந்திரி கேட்கப்பட்டிருக்கின்றார். வடமாகாணத்துக்கு அனுப்பிவைக்கப்பட்ட 40 சிங்கள ஸ்ரீ பஸ்கள் இங்கிருந்து படிப்படியாக மீள எடுத்துக்கொள்ளப்படும். இவற்றிற்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மொழிக்கொள்கையின் விளைவு

"ஒன்றில் ஆட்சிபுரியவேண்டும், அன்றேல் வெளியேறிவிடவேண்டும். இதுபற்றி அரசாங்கம் விரைவிலே ஒருமுடிவுக்கு வரவேண்டும். வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தமிழரசுக் கட்சி ஆரம்பித்துள்ள சிங்கள 'ஸ்ரீ' எதிர்ப்பு இயக்கத்தால் ஆபத்தான நிலைமை உருவாகியுள்ளது. நாட்டினை இரண்டாகப்பிரித்துள்ள துரதிர்ஷ்டம் பிடித்த மொழிக்கொள்கையின்விளைவு இது. ...அரசாங்கம் இப்பொழுதே உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால் இருசமூகங்களுக்குமிடையே பெருந்துவேஷமும், இரத்தப்பெருக்கும் ஏற்படலாம்."

**செனற்றர் எஸ். நடேசன்.**

### இளைஞர்கள் முன்வரவேண்டும்

"யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள தீவுபகுதிகளில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர்நிலம் தரிசாகக்கிடக்கின்றது. ஒல்லாந்தர்கள் செய்ததைப்போன்று விஞ்ஞான அறிவைப் பயன்படுத்தி இந்தத்தரிசுநிலங்களை வளங்கொழிக்கும் கழனிகளாகமாற்ற இளைஞர்கள் முன்வரவேண்டும். தமிழ்ப்பேசும் மக்களின் வருங்காலம் விவசாயத்திலும், கைத்தொழிலுமே தங்கியிருக்கிறது."

**திரு. வி. ஏ. கந்தையா,**
ஊர்காவற்றுறை, எம். பி.

### பிரதமரின் கவலை

"மந்திரிகள் எப்படி ஒருவரோடொருவர் சச்சரவிட்டுக் கொள்ளுகின்றனர் என்பதைமாத்திரம் பத்திரிகைகள்மூலம் படித்தறியும் பொதுமக்கள் அதிருப்தியே யடைவர் என்பதைப்பற்றி எச்சரிக்கைசெய்ய விரும்புகிறேன். அரசாங்க கட்சியைச் சேர்ந்தவர்கள் தமக்கிடையே ஒத்துழைத்துக் கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றவேண்டும். வெளியிலுள்ள நமதுவிரோதிகள்பற்றி நான் கவலைப்படவில்லை. உள்ளேயிருக்கும் எனது சிநேகிதர்களைப்பற்றித்தான் நான் கவலைப்படுகிறேன்."

**பிரதமர் பண்டாரநாயகா.**

### பிரதமரிடம் முறையீடு

"எங்கள் தொகுதிகளில் வேலையில்லாத்திண்டாட்டம் அதிகரித்திருப்பதாலும், வாழ்க்கைச்செலவு உயர்ந்திருப்பதாலும் எங்கள் தொகுதிகளுக்கு எங்களால் போகமுடியவில்லை. அதனால், கொழும்பிலுள்ள தொழிலாளரின் கோரிக்கைகளுக்குமட்டும் செவிசாய்க்காமல் மக்கள் அரசாங்கத்தை ஏற்படுத்திய கண்டிப்பகுதி விவசாயிகளின் கோரிக்கைகளையும் கேட்கவேண்டும்."

**கண்டிப்பகுதி எம். பி. கள்.**

---

பதிலாகக் கொழும்பிலும், ஏனைய விடங்களிலும் போக்குவரத்துநடத்தும் பஸ்களை அனுப்பிவைக்கப் போக்குவரத்துச்சபை தற்போது ஒழுங்குசெய்து வருகிறது.

### கொழும்புத்திட்ட சுவீப்

கொழும்புத்திட்ட பொருட்காட்சிக்கென்று 1955-ம்ஆண்டு தொடக்கப்பட்ட கொழும்புத்திட்டசுவீப் சென்ற 3-ந்திகதியோடு முடிவடைந்துள்ளது. கடைசியானசுவீப் அன்றுமாலை குதிரைப்பந்தயக்களப்பில் இழுக்கப்பட்டது. கொழும்புத்திட்ட பொருட்காட்டயை நடத்துவதில்லையென்று மந்திரிசபை முடிவுசெய்ததின்பேரிலேயே இந்தச்சுவீப் நிறுத்தப்படலாயிற்று. இதன்மூலம் இதுவரை சேகரிக்கப்பட்ட சுமார் 30லட்சம்ரூபாவையுங்கொண்டு கைத்தொழிற்பொருட்காட்சிச் சாலையொன்று திறக்கப்படவிருக்கிறது. இனிமேல் வெள்ளநிவாரண—புனருத்தாரண வேலைகளுக்கென்று புதியசுவீப்ஒன்றை நடத்தஅரசாங்கம் முடிவுசெய்திருக்கிறது.

# படித்துப் பாருங்கள்!

### முழுக்காரணமும் என்ன ?

"பிரதமர் பண்டாரநாயகா ஓர்நூதனமான புத்தகொள்கையைக்கொண்ட மத்தியவழியைக் கடைப்பிடிப்பதாகத் தெரிகிறது. இந்த மத்தியவழி நாட்டில் சாதிப் பூசல்களைக்கிழப்பி அழிவைஉண்டுபண்ணிக்கொண்டிருக்கிறது. அவர் தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்குமிடையேநிலவிய ஐக்கியத்தை உருக்குலைத்துவிட்டார். இன்று நாட்டில்நிலவும் குழப்பநிலைக்கு முழுக்காரணமும் பிரதமரிடமுள்ள தைரியமற்ற தன்மையேயாகும். யு. என். பி. காலத்தில் நிலவியவகுப்புஒற்றுமை தற்போது முற்ருக அழிக்கப்பட்டுப் போயிருக்கிறது."

**திரு. டட்லி சேனநாயகா,**
முன்னைநாள் பிரதமர்,

### எவ்விதபயனும் அளிக்கமாட்டாது

"உணவுமந்திரி பிலிப் குணவர்த்தன உற்பத்திசெய்துள்ள நெற்காணிச்சட்டம் அவரைச் சர்வாதிகாரியாக்க உதவுமேயொழிய ஏழைக்கமக்காரனுக்கு எவ்விதபயனும் அளிக்கமாட்டாது."

**திரு. எம். டி. பண்டா,**
முன்னைநாள் எம். பி.

### அழிப்பினல் மறைந்துவிடாது

"பண்டுதொட்டு அழியாமல் நிலைத்திருக்கும் தமிழ்ப்பாஷை சிங்கள வகுப்புவாதிகள்சிலரின் தார்ப்பூச்சு அழிப்பினல் மறைந்துவிடாது. தமிழ்ப்பாஷையும், சமுதாயமும் தனக்குரிய ஸ்தானத்தை நாட்டில்பெறத் தமிழ்ப்பெண்களும் போராட்டத்தில் இறங்கவேண்டும்."

**ஆசிரியை செல்வி ரூபராணி யோசெவ்.**

### புத்தபிள்ளைகள் படிப்பதுநல்லது

"ஏனைய சமயஸ்தாபன பாடசாலைகளில் புத்தபிள்ளைகள் படிப்பது நல்லது. புத்த அல்லது அரசினர்பாடசாலைகளில் புத்தபிள்ளைகள் படிக்க விரும்பினல் இந்தவிஷயத்தில் அரசாங்கம் அதிககவனம் செலுத்தும். ஆனல், நீங்கள் நினைப்பதுபோல இது இலகுவான காரியமல்ல."

**பிரதமர் பண்டாரநாயகா.**

### சமயஸ்தாபன பாடசாலைகள்

"சமயஸ்தாபன பாடசாலைகள் இப்போதிருப்பதுபோல இனிமேலும் தொடர்ந்திருக்கும்படி அனுமதிக்கப்படவேண்டும். அமெரிக்காவிலே அரசாங்க சர்வகலாசாலைகள் அநேகம்உள்ளன. ஆனல், அரசாங்கசர்வகலாசாலைகள் அல்லாத ஹறல்ட், யேல், பிறின்ஸ்ரன், கோர்னெல்முதலியசர்வகலாசாலைகளே சிறந்து விளங்கக் காண்கிறேம். தமது வாழ்க்கையின் சிறந்தநாட்களைச் சமயஸ்தாபன பாடசாலைகளை அமைப்பதில் செலவிட்டவர்களும், இப்போது அரசாங்கபாடசாலைகளுக்காகத் தீவிரமாக வாதாடுபவர்களுமான சிலர் சமயஸ்தாபன பாடசாலைகளிலும்பார்க்க அரசாங்கபாடசாலைகள் சிறந்தனவாயிருக்குமென்று நம்ப ஏன் இவ்வளவுகாலம் சென்றது."

**திரு. எஸ். ஏ. விஜயதிலகா,**
ஆனந்தாக்கல்லூரி அதிபர்.

### அரசாங்கம் தவறிவிட்டது

"இந்நாட்டில் விஷம்போல ஏறிவரும் வாழ்க்கைச்செலவைக் குறைக்க அரசாங்கம் தவறிவிட்டது. வாழ்க்கைச்செலவுப்புள்ளி குறைக்கப்படவேண்டும். சம்பளத்தை அதிகமாக்குவதன்மூலம் வாழ்க்கைச்செலவைக் குறைத்துவிட முடியாது. இன்று வாழ்க்கைச்செலவு வெகுவாக அதிகரித்துள்ளதனல் கிராமப்புறங்களிலுள்ள பெரும்பான்மையான ஏழை மக்கள் கடனாளிகளாக உள்ளனர். ஏழைக்கிராமவாசிகளின் நிலைமை மிக மோசமாகியுள்ளது. இந்நாட்டுஏழை மக்களின் துயரத்தைப் போக்குவதற்காக வாழ்க்கைச்செலவைக் குறைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசாங்கத்தின்கடமையாகும்.

**திருமதி விமலா விஜயவர்த்தன,**
சுகாதார மந்திரி.

### நெற்காணிச் சட்டம்

"நெற்காணிச்சட்டம் இந்நாட்டு விவசாயிகளிடையே அமைதியின்மையை ஏற்படுத்தியுள்ளது. விவசாயக் கம்மிற்றிகள் விவசாயிகளுக்குப்பெருந்தொல்லையாக இருக்கின்றன. இதன் விளைவாக விவசாயிகளிடையே அமைதியின்மை அதிகரித்துவருகிறது. இச்சட்டம் நெற்காணிச் சொந்தக்காரருக்கும், விவசாயிகளுக்கும் அமைதியின்மையைக்கொடுப்பதுடன் இந்நாட்டு நெல்உற்பத்தியையும் குறைத்துவிடும். விவசாயிகளின் நலனுக்காக நான் கடைசிவரை போராடுவேன்."

**திருமதி விமலா விஜயவர்த்தன,**
சுகாதார மந்திரி.

### எல்லாம் தேசீயமயமானல்

"இலங்கையில் இப்பொழுது 'தேசியமயம்' என்ற தொற்றுநோய் பரவிக்கொண்டிருக்கிறது தேசீயமயம் வேண்டுந்தான். ஆனல், எல்லாம் தேசீயமயமாக்கப்பட்டால் ஜனநாயகம் நிலைத்துநிற்கமுடியாது. தேசீயமயமாக்கப்பட்ட தொழில்களிலுள்ள ஊழியர்கள் வேலைநிறுத்தம்செய்வதற்கு அரசியற்தலைவர்களால் தூண்டப்பட்டால் அரசாங்கத்தையே கவிழ்க்கக்கூடிய நிலைமைஏற்படும்.

**திரு. பி. ஆர். இராமகிருஷ்ணன்,**
பிரபலஇந்திய தொழில்அதிபரும்,
ரேட்டறி கவர்னரும், இந்திய எம். பி. யும்.

### சிங்கள எழுத்துக்களுடன் அல்ல

"வகுப்புவாதத்தை மீண்டும்கிளப்பிவிடச் சமஷ்டிக்கட்சி முயற்சிசெய்கிறதென்று குற்றஞ்சாட்டப்படுகிறது. மோசமாக நடத்தப்படும் ஒருசமுதாயம் அநியாயத்தை ஆட்சேபித்தால் அதற்கு வகுப்புவாதமென்று பட்டம் சூட்டப்படுகிறது. சிறுபான்மையினருக்கெதிராக எடுக்கும் இத்தகைய நடவடிக்கைகளினல் பெரும்பான்மையினரின்செயல்களே வகுப்புவாதமென்று சொல்லவேண்டும். தமிழ்ப்பேசும் பகுதிகளுக்குப் புதியநல்லபஸ்கள்வேண்டும். ஆனல், சிங்களஎழுத்துகளுடன் அல்ல."

**திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம்.**
சமஷ்டிக்கட்சிப் பிரமுகர்.

---

### வானவெளி செல்லும்விமானம்

வானவெளியின் மறுஎல்லைக்குச் சென்று திரும்பக்கூடிய 'ரொக்கற்' எனப்படும் ஆகாயபாண விமானம் ஒன்று அமெரிக்காவிலே கண்டுபிடித்துக் கட்டப்பட்டிருக்கிறது. இந்த விமானம் அங்கிருந்து பூமிக்குத்திரும்பும்போது பழுக்கக்காய்ச்சிய இரும்பின்நிறமுடையதாய் இருக்கும்; ஆனல், விமானிக்கு எவ்விதஆபத்தும் ஏற்படமாட்டாதென்று அதனைக்கட்டியவர்கள் கூறுகின்றனர்கள். இந்த விமானம் மணித்தியாலம் 3,600மைல் வேகத்தில் செல்லக்கூடியதாயும், ஒரு ஆளை வானவெளிக்குஎடுத்துச்சென்று மீளவும்பூமிக்குக் கொண்டுவரக்கூடியதாயும்வட அமெரிக்கவிமானக்கம்பெனி இதனைத் தயாரித்திருக்கிறது. அடுத்த வருடம் இது பரீட்சார்த்தமாகப் பறக்கத் தயாராயிருக்கும். பூமண்டலத்துக்கு அருகிலுள்ள சீதோஷ்ணநிலையைப்போன்ற சீதோஷ்ணநிலையில் வைத்திருக்கக் கூடிய விசேஷஉடை விமானிக்கு அணிவிக்கப்படும்.

### நாளுசங்கதிகள்

● பெல்ஜியதேச பிறசெல்ஸ்நகரிலே சமீபத்தில் ஆரம்பமாகவிருக்கும் சர்வதேச பொருட்காட்சியிலே "கடவுளின் நகரம்"என அறியப்படவிருக்கும் வத்திக்கான் காட்சிமண்டபத்திற்கென்று இந்தியாவிலே கத்தோலிக்க வாழ்க்கையைக் காண்பிப்பதற்கென்று விசேஷவிதமாய் எடுக்கப்பட்ட சினிமாப்படம்ஒன்று இந்தியகத்தோலிக்கரால் அனுப்பிவைக்கப் பட்டிருக்கிறது.

● சுதந்திரஅயர்லாந்தின் தலைப்பட்டணமாகிய டபிளின்குடாக்கடலுக்குமேலாகத் தோற்றக்கூடியதாய் 60 அடிஉயரமான கருங்கல் தம்பபீடத்தின்மீது தேவதாயாரின் பாரியவெண்கலச்சுரூபம் ஒன்று 16,000 பவுண் செலவில் அமைக்கப்படவிருக்கிறது. இராக்காலத்திலேஇது ஒளிவெள்ளக் கதிர்கொண்டு பிரபைவீசுமாறு செய்யப்படும்.

● கிறீஸ்துநாதர்அணிந்த தையலில்லாத திருஅங்கியென்று நம்பப்படுவதான ஓர்மேலங்கி ஜேர்மனிதேச றியர்நகரிலே இவ்வருடம் காட்சிக்கு வைக்கப்படவிருக்கிறது. இந்தஅங்கி றேமைஇராச்சியத்தின் முதலாவது கிறீஸ்துவ சக்கிரவர்த்தியான பெரிய கொன்ஸ்தந்தீனின் மாதாவான அர்ச். எலேனம்மாளால் அந்நகருக்கு அன்பளிப்புச்செய்யப்பட்டதாம்.

● சிசிலிதீவிலே சைறக்குஸ்நகரில் கண்ணீர்சிந்திஅழும் மாதாவின் பேரால் அமைக்கப்படவிருக்கும் திருசேத்திரத்திற்கென்று இதுவரை உலகமுழுவதிலுமுள்ள கத்தோலிக்கமக்கள் 1,80,000 பவுண் உபகரித்திருக்கின்றார்கள். ஓர்மகாதேவாலயமாய் இருக்கப்போகும் இந்தத்திருசேத்திரம் மாதாவின் சுரூபம் கண்ணீர்சிந்திய அந்தத் தொழிலாளியின் வீட்டுக்குச்சமீபமாகவே கட்டியெழுப்பப்படவிருக்கிறது.

● கருதினல்அலெக்சான்ட்ரே வோர்தே ஆண்டவர் சென்ற 29-ந்திகதி சனிக்கிழமைஇரவு காலஞ்செல்லலாயினரென றேமைநகரிலிருந்து தந்திச் சமாச்சாரம் கிடைத்திருக்கிறது. கருதினல்மாரில் முதல்வரான இவர் சென்றபங்குனிமாதம் 20-ந்திகதியன்று தமது 93-வதுபிறந்தபெருநாளைக் கண்டுகளிக்கலாயினர்.

● ஆதாவற்ற ஏழைகளின் சிறிய கன்னியாஸ்திரீமார் சபையை அடியிட்டவளான யேசுவின் தெரேசா என்ற ஸ்பானிய கன்னியாஸ்திரி நிகழும் சித்திரைமாதம் 7-ந்திகதிவியாழக்கிழமை சம்பேதுருவானவர் மகாதேவாலயத்திலே முத்திப்பேறுபெற்றபட்டம் அருளப்படவிருக்கின்றாள்.

* * *

### கருதினல்மாரின் வெள்ளியூபிலி

1933-ம்ஆண்டு பங்குனிமாதம் 11-ம்பத்திநாத பாப்பானவராலே கருதினல்மார்ஆக்கப்பெற்ற நான்கு கருதினல்மார் சமீபத்திலே தாங்கள் கருதினல்பதவிவகித்த 25-ம் ஆண்டு நிறைவுவிழாவைக் கொண்டாடினர்கள். இவர்களில்ஒருவர் தற்போது 84வயதுடையவரும், அர்ச். பேதுருவானவர் மகாதேவாலய அத்தியட்சகுரவருமான கருதினல் றெதெஸ்சினி ஆண்டவர், மற்றொருவர் தற்போது 85வயதுடையவரும், விசுவாசப்பரப்புதல் திருச்சங்கதலைவருமான கருதினல் புமாசோனி பியொந்திஆண்டவர். இவர் ஏறக்குறையத் தமதுகண்பார்வையை இழந்தவராய் இருந்தபோதிலும் இன்னுமேஊக்கமாகத் தமது கடமைகளை ஆற்றிவருகின்றர். யூபிலிநாயகர்களில் இன்னொருவர், தற்போது 84வயதுடையவரும், புளோறென்ஸ்நகர் அதிமேற்றிராணியாருமான கருதினல் தல்லாகொஸ்தாஆண்டவர். பின்னொருவர் தற்போது 82வயதுடையவரும், தூறின்நகர் அதிமேற்றிராணியாருமான கருதினல் பொசாத்திஆண்டவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வத்திக்கானில் பயிற்சிபெறும் பல்வேறு சாதிக் குருமார்

— தனிநாயக அடிகள் —

வத்திக்கான் வெளிப்பார்வைக்குப் பழைமையைக்காட்டினும் புதுமையும் பல்வேறுஇடங்களில் தோன்றுகின்றது. வத்திக்கானிலுள்ள வானொலி நிலையம் பெரும்ஆற்றல் வாய்ந்தது. பாப்புமாரின் ஓசையும், ஒலியும் உலகெல்லாம்செல்ல வேண்டுமென்னும் நோக்கத்துடன் அது நிறுவப்பெற்றது. உரோமாபுரியிலே கல்வி பயிலும் தமிழ்ப்பேசும்மாணவர் அதிலிருந்து சிலவேளைகளில் தமிழ்உரைகள் நிகழ்த்துவர். அதிலிருந்து வெளிவரும அறிக்கைகளும், அறிவுரைகளும் பக்களது வாழ்க்கையின் எதிர்கால நன்னிலையை அடிப்படைக்கருத்தாக அமைத்துப் புதுப்பொருளாய் ஒலிக்கின்றன.

### வத்திக்கான் வானொலிநிலையம்

வானொலிநிலையம் வத்திக்கான்பூந்தோட்டத்தில் நிறுவப்பெற்றிருக்கிறது. மாலைவேளையில் அப்பூந்தோட்டத்தில் பாப்பரசர் தனியோடப்படுவதையும் அல்லது நடந்துகொண்டுஜெபிக்கலைப்படிப்பதையும் நான்டமுறை கண்டிருக்கிறேன். வத்திக்கான் அரசிற்கு உட்பட்ட பிறிதொரு நிலப்பரப்பும் உண்டு. அதுபாப்பானவரின்கோடைகால அரண்மனையாகிய காஸ்தல் காண்டல்போ. அங்கு பாப்புமாரின் விண்ஆராயும்நிலையம் உள்ளது. விண்ணுலகை நாடுவதால் நச்சயத்தலைவர் விண்ணியலில் ஈடுபட்டு அப்பயிற்சியைப்பேணி வந்துள்ளனர்போலும்.

### காவல் படைகள்

வத்திக்கானின் படைகளைக் குறிப்பிட்டேன். பலநிற ஆடைகளையும், தொப்பிகளையும் அணிந்த படைவீரரையும், பொலிசாரையும் வத்திக்கான் நகர் ஆசிற்காணலாம். சுவிஸ்காப்பாளர் படை பொதுவாசக் கதவுகளையும், படியேணிகளையும் காக்கும். சுவிற்சர்லாந்திலிருந்து வரும்இவர்கள் தாம் காப்பாளராக இருக்குமட்டும் மணஞ்செய்யாதிருக்கின்றனர். பலநிறக்கோடிட்ட உடையணிந்தும், வேலேந்தாங்கியும் இவர்கள்நடமாடும்காட்சி மிகவும்இனியது. சுவிஸ்காப்பாளர் தம் உயிரைக்கொடுத்தும் தாம் காக்கும் மன்னரைக் காப்பாற்றிவருவர் எனும் நம்பிக்கை வரலாற்றில் வலியுறுத்தப்பெற்ற ஒரு நம்பிக்கை. பாப்புமாரின் மெய்காப்பாளராக அவர் கூடங்களில் பணிசெய்பவர் "பிரபு காப்பாளர்" என்னும்படையினர். இவர்கள் பண்டை இத்தாலிய அரசுநிலைக் குடும்பங்களைச்சேர்ந்தவர்கள். சென்றபெரும் போர் நிகழ்ந்தபொழுது, அமைதிநிலை உடன்படிக்கைபற்றிச் சூழ்வதற்குப் பாப்பாண்டவரையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று சேர்ச்சில் ஸ்ராலினுக்குக் கூறினாராம். ஸ்ராலின் அவரது ஆலோசனையை மறுத்துப் "பாப்பாண்டவர் எத்தனைப் பட்டாளங்களைப் போரில்இறக்குவார்" என்று வினவினராம். பாப்பாண்டவரின் படைகள் ஈராயிரத்திலும்கூடியன அன்று. அப்படைகள் போர்ப்படைகளல்ல; அவைகள்வெறும் சடங்குப்படைகள். பாப்பாண்டவரின் அரசு மறத்தின் அரசன்று, அறத்தின் அரசு. எனவே, அவ்வரசு வலிமையால் நிலைநாட்டப்பெறுது உரிமையால் காப்பாற்றப்பெற்று வருகின்றது. தனிமனிதனின் சுதந்திரத்துக்கும், அரசின் சுதந்திரத்துக்கும் வலிமையன்றி உரிமையேஅடிப்படையாகும்.

### கல்லூரி

வத்திக்கான்நகருக்கு வெளியேயிருந்தும் அவ்வரசுக்கே உரிமையான கல்லூரிஒன்றில் நான் குருமடக்கல்வியை ஐந்தாண்டுகளாகப் பயின்றுவந்தேன். கிழக்குநாடுகளை ஐரோப்பியர் கண்டுபிடித்தகாலத்தில் அந்நாடுகளிலிருந்து வரும் மாணவர்க்கென அக்கல்லூரியைப் பாப்பாண்டவர் ஒருவர் நானூறு ஆண்டுகளுக்குமுன் நிறுவினர். அங்கே ஏறக்குறைய 35 நாடுகளிலிருந்து 250 மாணவர் என்னுடன் குருபடத்திற் பயிற்சிபெற்றுவந்தனர். அவர்கள் வெவ்வேறு நிறத்தோற்றமுடையவர்கள், வெவ்வேறுமொழிகளைப் பேசுபவர்கள். வெவ்வேறு பண்பாட்டைக் கொண்டவர்கள். சீனர், ஜப்பானியர், அமெரிக்கர், தேனியர், ஆபிரிக்கர், இந்தியர்அனைவரும் அன்புடன்வாழ்ந்து வந்தோம். வெவ்வேறு நாடுகளைப் பற்றியும், இலக்கியங்களைப்பற்றியும் அறிவதற்கு அக்கல்லூரி அரியவாய்ப்பையளித்தது. என் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" மனப்பான்மையை வளர்த்தது அக்கல்லூரியே.

அங்கு ஈழத்திலிருந்தும், தென்னிந்தியாவிலிருந்தும்வந்த தமிழ்ப்பேசும் பதின்பர் இருந்தோம். கும்பகோணத்தில் இருந்துவந்த இருவரின்முயற்சியால் சிறுதமிழ்ச்சங்கம்ஒன்றை நடத்திவந்தோம். அதற்கு வீரமாமுனிவர் தமிழ்ச்சங்கம்என்று பெயரிட்டோம். விடுமுறைநாட்களிற் கூடித் தமிழில் உரையாடுவோம். அப்பொழுது யாழ்ப்பாணத்தமிழை இந்தியர் நகைக்க, ஈழத்தாராகியநாங்கள் வடக்குத்தமிழ்என்று தென்னாட்டுத்தமிழை நகைப்போம். கோடை விடுமுறையில் மறையுரைகளும், விரிவுரைகளும் அச்சிறுகூட்டத்தில் நிகழ்த்திவந்தோம். சிலநாட்களிலே நாடகங்கள், இசையரங்குமுதலிய பொழுது போக்கு நிகழ்ச்சிகள் நடைபெறும்பொழுது வெவ்வேறுநாட்டவர் தத்தம்நாட்டிற்குரிய நாட்டியம, பாடல்முதலியவற்றை அரங்கேற்றுவார்கள். அப்பொழுது தமிழ்நாட்டவரும் தமிழ்நாட்டுக் கலைநிகழ்ச்சிகளை அரங்கேற்றுவர்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்குமுன் நான் சங்கத்துக்குச் செயலாளராக இருந்தகாலத்தில் நாங்கள் எழுதிய குறிப்புஏடே இன்றும் அக்கல்லூரியிலுள்ள தமிழ்மாணவரால் பயன்படுத்தப் படுகின்றது. அண்மையில் அங்கு சென்றிருந்தபொழுது, அம்மாணவர் அவ்வேட்டைக்கொணர்ந்து என்குறிப்புகளைச் சுட்டிக்காட்டினர்.

---

● இளம்கிறீஸ்துவதொழிலாளர்களின் முன்னைநாள் சர்வதேசதலைவராயிருந்த திரு. பற்றிக் கீகன் அவர்கள் இளம்கிறீஸ்துவதொழிலாளர்களின் இயக்கம்சம்பந்தமாய் ஆற்றியுள்ள சிறந்தசேவைகளைப்பாராட்டிப் பரிசுத்த பாப்பரசர் அவருக்கு அர்ச். கிறகோரியாரின் நைற்பட்டம் சங்மானித்திருக்கின்றார்.

● இத்தாலியில் தற்போது குருமார், சந்நியாசர், கன்னியாஸ்திரிமாராய் 1 லட்சத்து 15 ஆயிரம் பேர் இருந்துவருகின்றனர். இவர்களில் குருமார் 55,000 பேர், சந்நியாசர்கள் 8,000 பேர். கன்னியாஸ்திரிமார் 51,000 பேர். இவர்களைத்தவிர அத்தேசத்திலே [illegible] தாந்தசபைக[illegible] 338 பாதிரிமாரும் இருக்கின்றார்கள்.

# அர்ச். பெர்னதெத் அம்மாளின் வீடு

— 'சர்வவியாபி' ஆசிரியர் —

லூர்துபதியைத் தரிசித்தபின் மறக்கமுடியாதஆளவிலே நமதுமனதில்பதிந்திருக்கும் ஒருநினைவுச்சின்னம் அர்ச். பெர்னதெத் அம்மாளின் வீடுதான். புகைவண்டி நிலையத்திலிருந்து திருப்பதிக்குச்செல்லும்வழியிலே நகரின் மத்தியில் பெர்னதெத்வீதிஎன ஒரு தெரு இருக்கின்றது. அதன்மருங்கில் 30 கெஜ இடைவெளியுடன் பெர்னதெத் தனதுபெற்றோருடன் வசித்துவந்த இருவீடுகளும், மற்றோர்தெருவில் ஒருசிறுவீடும் அமைந்துள்ளன. இவைகள் பாழடையாது இன்னுமே பத்திரமாகக் காப்பாற்றப்பட்டு வருகின்றன.

1. பெர்னதெத் 1844-ம் ஆண்டு தைமாசம 7-ந்திகதி பிறந்ததும், 1854-ம்ஆண்டுவரை வளர்ந்ததும் முன்சொன்னதெருவில் லாப்பாக்கா என்ற நீரோடையின் கரையிலுள்ள போலிஆலை என்றவீடு. இவ்விடுஅன்றிருந்தநிலையில் இன்னுமே பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கிறது. இதன் மெத்தைப்பகுதியிலுள்ள ஓர்அறையில்தான் பெர்னதெத்பிறந்ததாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

2. 1844-ம் ஆண்டிலிருந்து 1863-ம் ஆண்டுவரை அதாவது காட்சி நடந்தசமயத்திலே (1858) பெர்னதெத் குடும்பம் ஏழ்மை மிகுதியால் காஷோ என்ற அழுக்கடைந்ததும், சிறைக்கூடம்போன்றதுமான ஒருசிறு வீட்டில் வசித்துவந்தது. இச்சிறுவீடு பெத்திப்போஸ் என்ற வேறொருதெருவில் இருக்கின்றது.

3. 1863-ம் ஆண்டுக்குப்பின் இந்த ஏழைக்குடும்பம் மீண்டும் 'பெர்னதெத்' வீதிக்குவந்து வேறொருவீட்டில் வசிக்க ஆரம்பித்தது. இவ்வீட்டை இந்தக்குடும்பத்துக்கு லோறென்ஸ் சுவாமிகள்என்ற குருவானவர் தர்மசிந்தையுடன் 1863-ம்ஆண்டு வாடகைக்கும், 1867-மஆண்டிலிருந்து கிரயத்துக்கும் வாங்கிக்கொடுத்தாராம். இவ்வீட்டுக்கு "லாக்கா தேஆலை" என்று பெயர். இவ்வீட்டின்மீது முகப்பில "பெர்னதெத்தின் தந்தைவீடு" என்று எழுதப்பட்டிருக்கிறது. திருயாத்திரிகர்கள் அதிகமாகத்தரிசிக்கும் வீடு இதுதான். இவ்வீட்டின் அடித்தளத்தில் நுழைந்ததும் நமது வலதுகைப் பக்கத்தில் பெர்னதெதின் தந்தை வேலைசெய்ய உபயோகித்த சிறுஇயந்திரமும், இடதுகைப்பக்கத்தில் சமையலறையும் காட்சியளிக்கின்றன. சமையலறையில் பெர்னதெத்தின் தாய் உபயோகித்த படுக்கை (அதில்தான் அவள் மரித்தாள்) நான்கு முரிந்த நாற்காலிகள், ஓர்மேசை, சமையலுக்கான வாணல்கள், மாச்சல்லடைகள், ஒருகூசா, ஒருஉடைந்தவிளக்கு முதலியன வைக்கப்பட்டுள்ளன. இந்தச் சமையலறையில்தான் பெர்னதெத் மடத்துக்குப் போகுமுன் தாயை அரவணைத்து எல்லோரிடமும் பிரியாவிடைபெற்றுச் சென்றதாகச் சொல்லப்படுகிறது. மெத்தையிலுள்ள ஓர்அறைதான் "பெர்னதெத் அறை." இதிலே ஒருபுறத்தில் பெர்னதெத்தின் படுக்கையும், மறுபுறத்தில் அவள் தந்தையின் படுக்கையும், இன்னொரு சிறுபடுக்கையும் இருக்கின்றன. மேலும் இவ்வறையின் சுவர்களில் பெர்னதெத்தின் குடும்பப் புகைப்படங்கள்பல மாட்டப்பட்டிருக்கின்றன. 4-3-1871-இல் மரித்த தந்தையின்படம், 8-12-1866-இல்மரித்த தாயின்படம், 27-2-1919-இல் மரித்த ஜோன்மரி சுபிரூஎன்ற சகோதரனின் படம், 2-2-1931-இல் மரணமான பியெர் சுபிரூஎன்ற மற்றொருசகோதரனின்படம், தனது பெற்றோருடனும், உடன்பிறந்தோருடனும் தலையிலே வெள்ளைக் கைக்குட்டை ஒன்றைக் கட்டியபாவனையில் பெர்னதெத் எல்லாருக்கும் நடுவே உட்கார்ந்திருக்குப்படம், லூர்துநகரிலிருந்த கன்னியருடன் அவள் அமர்ந்திருக்குப்படம், நெவெர் நகருக்குச் சென்றபின் அங்குள்ளகன்னியர்மடத்தில் எடுக்கப்பட்டபடம். இப்படங்கள்யாவும் பெர்னதெத்தின் நெருங்கியஉறவினரை நொடிப்பொழுதில் அறிமுகப்செய்து வைக்கின்றன. அதுமட்டுமல்ல, பெர்னதெத்தின்குடும்பம் அன்றுமுதல்இன்றுவரை எவ்வாறுபிரிந்து வளர்ந்து வருகின்றதுஎன்பதைக் காட்டக்கூடியஉறவின்முறையை விளக்கும் ஒருபடமும் அங்குண்டு. இதன்படி பெர்னதெத்தின் இருசகோதரர்களில் ஒருவரான ஜோன் மரி சுபிரூ என்பவரின் சந்ததியார்தான் இன்னும் சீவந்தராய் இருக்கின்றனர். பியெர் சுபிரூஎன்ற சகோதரனின் சந்ததியும், மரி சுபிரூஎன்ற சகோதரியின் சந்ததியும் இவர்களின் பிள்ளைகளான முதல்தலைமுறையோடு அழிந்துவிட்டன. பெர்னதெத் கன்னியாகிப் புனிதம்பொங்கும் புண்ணியவாழ்விற்குப்பின் நெவெர்நகரில் அழியாஉடலைவிட்டு மோட்சபேரின்ப பாக்கியம் அனுபவிக்க 1879-ம் ஆண்டு சென்றுவிட்டாள். 1933-ம் ஆண்டு மார்கழி 8-ந்திகதியன்று திருச்சபையால் அர்ச். பட்டமும் வழங்கப்பட்டு எல்லா விசுவாசிகளினது உள்ளத்திலும் லூர்தன்னையோடு குடிகொண்டு எல்லாரையும் தனதுஞானச்சந்ததியாக்கிக்கொண்டாள்.

அர்ச். பெர்னதெத்தின் வீடுகளைக் கண்டபின் உலகில் அவ்வேழைப் பெண்ணைத் தெரிந்து, அவளுக்குக் காட்சியளித்து, அவளோடுஅளவளாவி மகிழ்ந்து, அவள்மூலம் தாம்விரும்பிய செய்தியை உலகிற்கு அறிவிக்கச்சித்தமான அன்னையின் அன்பையும், திட்டத்தையும் முன்னிலும் அதிகமாக வியந்து புகழ்ந்துகொண்டே நமதுதிருயாத்திரையைமுடித்து லூர்துபதியை விட்டுப் பயணமானேம்.

கால் முன்னேறவில்லை. வண்டியில் ஏறி அமர்ந்தபின் அது நம்மைவலுக்கட்டாயமாக இழுத்துச்சென்றுவிட்டது. ஆனால், அத்திருப்பதிக்கு — லூர்துநகருக்குத் திரும்பவும் செல்ல வேண்டுமென்ற ஆவல்மட்டும் மிகவும் சக்திவாய்ந்த ஒருகிருமிபோல் நமது உடலில் ஒட்டிக்கொண்டுவந்துவிட்டது. வளர்ந்துபலுகிப் பலமுற்றுவருகின்றது. லூர்துபதிசென்று திரும்பும் திருயாத்திரிகர்கள் ஒவ்வொருவரதும் அனுபவம் இதுவேயாகும். சுபம்!

---

❊ சமாதானமும், சுபீட்சமும் நிலவியிருந்த 200 வருடகாலத்திலே சந்நியாச, கன்னிகா ஆச்சிரமவாழ்க்கை நடத்துவதற்காகத் தங்கள்மணிமுடிகளைத்துறந்த ஆங்கில சாக்ஸன் அரசர்கள், அரசிகள் எத்தனைபேர்?

30 பேர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனிதவீரர் பக்கம்



அருமைச் சகோதரங்களே!

எமது திவ்வியகர்த்தரின் உத்தானம் எங்களுக்குச் சந்தோஷத்தைத்தருகிறது. அது உண்மையென்பதற்குச் சான்றுகள் பல உண்டு. சீஷர்கள் அதை இலகுவாய் ஏற்றுக்கொள்ளவில்லை, யேசுவின் காயங்களைப் பார்த்தபின், விலாக்காயத்தில் கையை விட்டுப் பார்த்தபின்தான் விசுவசிப்பேன்என்று அர்ச். தோமையார் சொன்னாரல்லவா? யேசு உண்மையாகவே உத்தானமானார்என்று அறிந்தபின் அவர்கள் அதற்காகத் தங்கள் உயிரையும் தியாகஞ்செய்யத் தயங்கவில்லை.

கிறீஸ்துவின் விரோதிகள் உத்தானஉண்மையை மறுக்கவில்லை. அதைப் பரப்பவேண்டாமென்று சீடரைத் தடுத்தார்கள். அவர்களைக் கசைகளால்அடித்து, மறியலில் வைத்தார்கள்; கொலைசெய்தார்கள். ஆனால், அது "பொய்"யென்று சொன்னாரில்லை.

கிறீஸ்துவேதம் உலகமெங்கும் பரம்பினதும் உத்தானத்துக்கு ஒருசாட்சி. அல்லாவிடில் மனிதஇயல்புக்கு மறுப்பானதும், கஷ்டமான கடமைகளைக் கற்பிப்பதும், கண்காணுச் சம்பாவனையை வாக்குப்பண்ணுவதுமான ஓர்மார்க்கம் இவ்வளவாக உலகில் பரம்பினதற்குக் காரணஞ் சொல்லமுடியாது.

உயிர்த்தெழுந்த கர்த்தரை மரியமதலேனாள் கண்டாள்; எம்மாவுசுக்குப்போன இருசீடர் சந்தித்தனர். சீடரின்தலைவரான இராயப்பருக்குத் தனியே தரிசனமானார். வேறொருசமயம் ஐந்நூறு அடியார் ஒரேநேரத்திற் கண்டார்கள். இவர்கள்எல்லாரும் ஏமாந்தார்களென்று சொல்லமுடியுமா?

ஆகையால், யேசுநாதர் உயிர்த்தெழுந்தது உண்மை. அவர் தமது போதகத்தின் உண்மைக்குச் சாட்சியாக மரித்தபின் உயிர்த்தெழுந்தார். ஆகையால், நாம்அவரில் விசுவாசங்கொள்ளலாம்.

அண்ணா.

—(ᴗ)—

## எதைத் தேடுகின்றீர்?

எதைத் தேடுகின்றீர்; எதைத் தேடுகின்றீர்?
இறைவா!
எதைத் தேடுகின்றீர்?
கண்களில் பனிநீர்;
எழில்முகம் இருளேன்?
வனம், மலை, நீள்வழி எதைத் தேடுகின்றீர்?

பச்சை மரகதம் பசும் புல்வெளி
அருவியூற்று வெள்ளித்தேக்கம்
மதுரம்; மதுரம்;
மங்கைக் கானம்.
நிறைவின் நிறைகுடம்
எங்கும், எதிலும்
ஏனோ கடுந்துயர்; எதைத் தேடுகின்றீர்?

ஆடுகள் தொண்ணூற்றொன்பதும்
அருகில்
ஆயனே! நேயனே!
கொஞ்சும் இன்மொழியில்
கெஞ்சும் தூயனே!
பாறைக்கற்களில் கால்கள் கன்றின;
பாதையெல்லாம் இரத்தச்சுவடு;
ஒன்றைத்தேடி ஓடுகின்றீரோ?
இலாபம் ஏதும்
உண்டோ இதனால்?

மகனே! மகனே!
மகனே! நீ கேள்:
பாறுங்கற்கள் பிளந்தனவா?
பாதச்சுவட்டில் இரத்தமா?
மரணம்எனக்கு மலரின்மாலை
கசந்தகாடி கரும்பு; கரும்பு
அன்புஎன் விருந்து;
தொண்ணூற்றொன்பதும்
எந்தன்சொத்து.
ஒன்றேஎந்தன் உயிருக்குயிராம்
அன்புக் குருத்து,
அதனைத்தேடியே அலைகிறேன் மகனே!

"மரிதாசன்"

## "பிதாவே! இவர்கள் அறியாமல் செய்கிறார்கள்....."

கல்வாரியின் உச்சிமுனையிலே, கள்வர்கள் இருவர் நடுவே, கதிரவனின் கொடுங்கிரணங்களின்கீழ் ஓர்பாரிய சிலுவைமரத்தின்மேல் மன்னுயிரை மீட்கவந்த மனிதஉருவம் — தேவகுமாரன் — யேசுபரன் தொங்குகிறார்.

உடல்முழுவதும் இரத்தம்வடியும் காயங்கள். தலையில் முரட்டுமுட்களால் செய்யப்பட்ட முள்முடிவைத்து இறுக்கப்பட்டிருந்தது. கன்னங்கள் கண்டிப்போய் இருந்தன. உதடுகள் காய்ந்து வரண்டுபோய் இருந்தன. தலையில்இருந்து வடிந்தஇரத்தத்துளிகள் கண்களில்பட்டுக் கண்களை மறைத்திருந்தன. வடுஇல்லா இடமே உடலில்இல்லை.

ஆம், மனிதஉருஎன்றே அவரைக் கூறமுடியாது. கைகளிலும், கால்களிலும் இருந்து இரத்தம் — ஒரே இரத்தத்துளி. ஆம், வேதனையின் சிகரம் — உள்ளமும் உடலும் ஒன்றாக அந்தவேதனைக்கடலிலே துடித்துப் பதைபதைத்தது. அன்பாக ஒருவார்த்தைசொல்ல அங்கு யாருமில்லை. "தாகம், தாகம்" என்று தவித்தவருக்குப் புளித்தகாடி கொடுக்கப்பட்டது. இதுதான் தன் வாழ்க்கையை மனிதனின் நல்வாழ்வுக்காக அர்ப்பணித்த அன்பின்உருவத்தின் கடைசிப்பிரயாணம். மரணவாயில்படியில் யேசு — மலைமேல் அன்பைப்பேசிய யேசுவின்நிலை — மரணத்தின்நின்று மற்றையோரை உயிர்ப்பித்த மாசற்ற மாணிக்கத்தின்நிலை — ஊமையை, குருடை, சப்பாணியைச் சுகப்படுத்திய சுந்தர புருஷனின் நிலைஇது. இரக்கத்தின் வார்த்தைகளை இதயமற்றோருக்குப் பொழிந்த உதடுகளில் இரத்தம். கருணையின் வடிவத்தைக்காட்டிய கண்கள் கறைபிடித்திருந்தன. ஆசிகூறி உயர்த்திய அருட்கரங்கள் ஆணியால் அறையப்பட்டிருந்தன. கானான்தேசத்துக் கலியாணத்தில் தண்ணீரை இனிய பழரசமாக்கிய புத்திமானுக்கு இறுதிநேரத்தில் தாகம்தீர்க்கப் புளித்தகாடி.

ஆனால், இந்நிலையிலும் அன்பு, பிறர்நேசம் இவைகளே அவர்வாயிலிருந்துவந்த வார்த்தைகள். புளித்த காடியைத்தந்த பாவவாளருக்காக அக்காடியைச் சுவைக்கமுடியாமல் சுருண்டு இரத்தம்படிந்த உதடுகளால் கடவுளிடம் மன்னிப்புக் கோருகிறார்.

"பிதாவே! இவர்கள் அறியாமற் செய்கிறார்கள், இவர்களைமன்னியும்.'"

அன்பின் அமலன் கொடுத்த அருள்வாக்கு, தம்உயிரைக்குடிக்கும் உன்மத்தர்களுக்கு — தம்மை வாட்டி வதைக்கும்பாதகர்களுக்குக் கொடுத்த பரிசாகும். ஆம், அன்பின் பரிசு. தன்னலமற்ற தியாகப்பரிசு. இதுவே, யேசு போதித்த "பிறர்நேசம்." யேசுவின் வாழ்க்கையே இவ்வடிப்படையில் அமைந்து ஒளிவிட்டது.

அன்பு — கருணை — அருள். இதுவே எம் ஆண்டவன் வடிவம். இதை அவர் தம்சீவியத்தில்காட்டினார், போதித்தார், எம்மையும் வாழும்படி கேட்கிறார். கிறீஸ்தவர்களாகிய நாமெல்லோரும் யேசுவுக்குக் காட்டும் ஒரேயொரு மதிப்புஎன்னவென்றால், அவரது வாழ்க்கைப்பாதை வழியே நாமும் திடமனதுடனும், துணிவுடனும் நடப்பதேயாகும்.

[illegible]

சுவிசேஷ விளக்கம் — 5.

## எல்லாருக்கும் நீதி

இன்பநாதர்சுவாமி சிர்மையிலிருந்து அண்மையில்வந்தார் அங்கு நிறநிழற்படங்கள் பல எடுத்திருந்தார். ஓர்இரவு சௌந்தரியும், மோகனும் தங்கள் வகுப்புமாணவருடன் அப்படங்களைப்பார்க்க வந்திருந்தார்கள். படக்காட்சி முடிந்தபின் மலர் சொன்னாள் "சோதி அண்ணன் இவைகளைப்பார்க்க ஆசைப்படுவார்" என்று: "அவருக்குப்பெரிய ஆவல் பிறந்திருக்கும்." "சோதிஎன்பவர் யார்"? என்று கேட்டார், இன்பநாதர் சுவாமி. "அவர் ஒரு வருத்தக்காரன்" என்றான் செயம்.

"அவர்நடக்கமாட்டாதவர்; ஒரே படுக்கைதான். ஆனால், ஊக்கமும், உசாரும் அவரிலேதான் காணலாம்" என்றான் மோகன்.

"ஞானசோதி நீதியில் பசியுந்தாகமுங்கொண்டவன் சுவாமி" என்றார் அமிர்தநாதர். அவன் இப்பொழுது என்னசெய்கிறான் தெரியுமா? "என்ன மாமா செய்கிறார்" எனக்கேட்டாள் மலர். பட்டணத்திலே வர்ண ஒற்றுமைச்சங்கமொன்றை ஆரம்பிக்க முயற்சிசெய்கிறான்" என்றார் அமிர்நாதர்.

"என்ன சங்கமம்" என்றான் மோகன்.

"நமக்குள் இருக்கும் வெவ்வேறு குலங்களுக்குள் ஒற்றுமையை உண்டாக்கும் இயக்கம். எல்லோருக்கும் நீதி சரிவர நடக்கச்செய்வது அவர்களின் நோக்கம்."

"நீதியைப்பற்றி ஞானசோதி சரியாய் விளங்கிக்கொண்டான்போலத் தோன்றுகிறது" என்றார் இன்பநாதர்சுவாமி. "அதெப்படிச்சுவாமி" என்று செயம்கேட்ட கேள்விக்குச் சுவாமியார்மறுமொழியாக "அப்படியென்றால், நீதியை நாம்அனுசரித்தால் ஒவ்வொருவருக்கும் உரிமையானதை அவரவருக்குக் கொடுக்க நாம் மனங்கொள்ளுவோம். பெரியோர் சிறியோர், பணக்காரர் ஏழைகள்என்ற வித்தியாசங்கள் பார்க்கமாட்டோம். உரிமையைப்பற்றியே கவலைகொள்ளுவோம்.

எல்லோருக்காகவும் ஆண்டவர் மரணித்தார். எல்லோரையும் பரகதியில்காண விரும்புகிறார். ஆகையால் அவர்களுக்குரிய உரிமையைக் கொடுப்பது நீதியாகும்." அங்கிருந்தவர்கள் சுவாமியார் கூறியதை மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். "விளையாட்டிலுமா" என்று கேட்டான் மோகன்.

இன்பநாதர் சுவாமிக்கு உடனே விளங்கினது. விளையாட்டிலும் நீதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைப்பற்றிப் பசிதாகங்கொள்ள வேண்டும். எவ்விடத்திலும், எவ்வேளையிலும் பிறர்உரிமைகளை மதிக்க வேண்டும். நீ பற்றுக்கொள்ளாத உடன்மாணவன்; பிறகுலத்தவன், பிறமதத்தவன் எல்லாருக்கும் நீதி வழங்கவேண்டும்.

ஞானசோதியைப் போன்றவர்களைப்பற்றிக் கடவுள்என்ன கூறுகிறார் தெரியுமா? தங்களால்ஆனமட்டும் நீதியை அனுசரிக்கிறவர்கள் கலங்கமாட்டார்கள். "நீதிமான் அழியா ஞாபகத்திலிருப்பான்."

சங்கீத. III. 1-6.

## சிந்தனைக்கு

சந்தோஷம்என்பது ஒருவாசனைத் திராவகம். இதை நீ மற்றவர்களின் மேல் ஊற்றப்போகும்போது கட்டாயம் சிலதுளிகள் உன்மேல்விழும்.

அழிவுக்குமுன் பெருமையும், வீழ்ச்சிக்குமுன் அகங்காரமும்வரும்.

நாம்பேசினவார்த்தைகளும், நம் கடந்தகால சீவியமும், தவறவிட்ட தருணங்களும் நம்மண்டை திரும்பி வரமாட்டா.

—( )—


# Educational (For Girls Only)

English Assistants, S S.C. Passed or even Unsuccessful! Assure yourself of a Certificate or a Higher Certificate worth a job on better pay.

Comprehensive Course of Training given for L.C.C. Higher General Commercial Certificate or Higher Certificate for Shorthand Typists.

Recommended Salary for Commercial Teachers is Rs. 1560—3240 with Efficiency Bar at Rs. 2640.

Higher Certificate for Shorthand Typists is in great demand in Mercantile Professions and Stenographers' Service.

No basic qualification necessary for L.C.C. examinations.

Contact,

M. M. Thuraisingham

20, Third Cross Street,
Jaffna.


# தனது இரத்தத்தால் உயிர் அளித்தவளுக்கு......

ஓர்ஊரில் ஒருபிரபுவம்சத்தில்பிறந்த ஒருத்திஇருந்தாள். அவளுக்கு ஒரேஒருமகன். அவள் அவனைத்தன் கண்மணியைப்போல் காப்பாற்றிச் சிநேகித்து இரவும்பகலும் விட்டுப் பிரியாது வளர்த்து வந்தாள். அப்படியிருக்கையில் ஒருநாள் அப்பையனுக்குக்கடினவியாதிகண்டது. பெற்றவள் அதிகவிசனப்பட்டு ஓர்வைத்தியன்போதாதுஎன்று திறமான மூன்றுவைத்தியர்களை ஆள்அனுப்பி வரவழைத்தாள். அவர்கள் வியாதியின் குணத்தை நன்ருய்விசாரித்த பின், "அம்மா, இது தீராதநோய்; ஏனெனில், அதற்கு மருந்துஇருக்குமென்றாலும் அம்மருந்து எங்கள் கைவசமில்லை" என்றார்கள். தாயானவள் "வைத்தியர்களே, மருந்தைச் சொல்லுங்கள். அதனைச்சம்பாதிக்க என்னவிலை கொடுக்கவேண்டுமென்றாலும் தருகிறேன்" என்றாள். வைத்தியர்கள் மனிதஇரத்தத்தில் பிள்ளையைக் குளிப்பாட்டினலொழிய அவனுக்குச் சுகம்வரமாட்டாது என்றனர்.

அதற்கு அவள் பயப்படாதேயுங்கள்; என்உயிர்போனல் போகட்டும்; என் இரத்த நரம்புகளைக்கீறிப் பிள்ளையினுடைய சீவியத்தைக்காப்பாற்றுங்கள்; நான் சந்தோஷமாக இறப்பேன்என, வைத்தியர்கள் அப்படிச்செய்து அவளுடையஇரத்தத்தில் பிள்ளையைக் குளிப்பாட்டியபின் நோய் குணமானது. பின்னர் தாயானவள் இன்னமும் சாகவில்லைஎன்று அவர்கள் அறிந்து அவளுடைய அந்தஸ்துக்குத்தகுந்த வைத்தியம் செய்தார்கள். அவளும் குணமாயினாள். அந்தப்பையன் அப்படிப்பட்ட தாயை எவ்வளவு சிநேகிக்கவும், சங்கிக்கவும் வேண்டியவனயிருப்பான்?

ஆனல், மனிதனுடைய நன்றிகேடு எம்மாத்திரமென்று நினைக்க முடியாது. தன்தாயாலே உயிர்ப்பிச்சை பெற்றவனென்பதை அவன் சற்றாகிலும் நினையாமல் தன்துஷ்டநடத்தையால் அவளை நெடுநாட்களாகத் துன்பப்படுத்திவந்தபின் ஒருநாள் கோபவெறியால் கத்தியால் குத்தி அவளைக்கொன்று போட்டான். அந்தத் துட்டபையன் எவ்விதபாவத்தைக் கட்டிக்கொண்டானே, அதேபோல், தகாதவிதமாய்த் தேவநற்கருணையைப்பெறுகிற கிறிஸ்தவர்களும் பாவத்தைக் கட்டிக்கொள்ளுகிறார்கள். ஏனெனில், யேசுநாதசுவாமி. அவர்களைப் படைத்து அவர்களுக்காகத் தமது திருஇரத்தத்தை எல்லாம்சிந்தி எந்தத்தாயையும்விட அவர்களுக்கு அதிகநன்மைசெய்தவர். ஆகையால் அந்தப்பாவத்திற்கு எவ்வளவோ பயப்படத்தகும்.

எம். இம்மனுவேல்,
அர்ச். என்றி அரசர்கல்லூரி,
இளவாலை.

## முத்திப்பேறுபெற்றபட்டம்

ஆதரவற்ற வறியவர்களின் சிறிய கன்னியாஸ்திரிமார்சபையை அடியிட்டவளான யேசுவின்தெரேசா என்ற ஸ்பானியகன்னியாஸ்திரி இம்மாசம் 17-ந்திகதி வியாழக்கிழமை முத்திப் பேறுபெற்றபட்டம் அருளப்படவிருப்பதாகச் செய்திகிடைத்திருக்கிறது.

## சிலுவைகளுடன் திருயாத்திரை

வாஷிங்ரன்நகரிலுள்ள அமலோற்பவநாயகியின் அமெரிக்க தேசியதிருசேத்திரத்துக்குச் சமீபத்தில் நடந்தேறிய ஓர்யாத்திரையிலே கம்யூனிஸ்தர்களால் அடிமைப்படுத்தி ஆளப்படும் பதினறுநாடுகளையும் குறிக்கும் பதினறு திருச்சிலுவைகள் எடுத்துச் செல்லப்படலாயின. அந்நாடுகளிலிருந்து தேசாந்திரிகளான சுமார் 400 பேர் கலந்துகொண்ட இந்தயாத்திரை ஓர்மவுன யாத்திரையாக நடைபெறலாயிற்று. ஹங்கேரி, போலாந்து, உக்றேயின், ரூமேனியா, மூன்று பால்த்திக்நாடுகள், யூகோசிலேவிய, சீன, கிழக்குஜேர்மனி, அல்பேனியா, பல்கேரியா, செக்கோசிலவாகியா, ரூஷியா, வடகோறியா, வியெற்மின் என்பனவே அப்பதினறு நாடுகளுமாகும்.

## மட்டக்களப்பு தாண்டவன்வெளித் தபால்

**அர்ச். சூசையப்பர் திருநாள்:**

சென்றபங்குனி 22-ம்நாள் சனிவாரம் பிற்பகல் 6-30மணி. எமதுபரிசுத்த வியாகுலமாதாவின் ஆலயமணிகள் ஆர்ப்பரித்தன. ஒலிபரப்பி எங்கும் பரிமளித்து எல்லோரையும்அழைத்தது. ஏன்? இப்பங்கில் யோசவ் என்ற சூசைமாதவவளனின் பெயர் பூண்டோராது உழைப்பின் பயனுக அர்ச். சூசையப்பர்திருநாளைக் கொண்டாடுவதற்கே.

செபமாலை, பிரார்த்தனை, பங்குக்குரவர் வண. ஜி. ஈ. எல். வம்பேக்சுவாமிகள் அர்ச். சூசையப்பரின் மகத்துவம்பற்றிச்செய்த இனியபிரசங்கம், மாலையாராதனைஎன்பன ஒலிபரப்பப்பட்டன. ஆலயத்தில் சமுகமளிக்க முடியாத வயோதிபர்களும், வியாதிஸ்தரும் அவற்றிலே மானசீகமாகச் செவியாரக் கலந்துகொண்டனர். தொடர்ந்து தேவநற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டது. மாலையாராதனைநேரம் வானம்இருண்டு, பெருமழை பொழிந்துகொண்டிருந்தது. எனினும், அர்ச். சூசையப்பர் திருச்சுரூபம் சுற்றுப்பிரகாரமாக வெளிகொண்டபோது மழைநின்றது. பக்தர்கள் மாதவவளனின் புகழைப்பாடிக்கொண்டே மெழுகுவர்த்தித் தீபங்களோடு சுற்றுப்பிரகாரத்தைப் பத்தியருட்சியாக முடித்ததும், திருச்சுரூப ஆசீர்வாதம் அருளப்பட்டது.

மறுநாள் ஞாயிறுவாரம் அதிகாலை 1-ம்பூசை 5-30மணிக்கும், 2-ம்பூசை பாடற்பூசையாக 7மணிக்கும் பங்குக்குரவரால் நிறைவேறியது. இருபூசைகளிலும் அர்ச். சூசையப்பரின் சீவிய வரலாற்றையும், நன்மரண பாதுகாவலரைக் கிறீஸ்துவர்கள் மன்றாடவேண்டியதன் அவசியத்தையும் விளக்கிப் பிரசங்கங்கள் செய்யப்பட்டன. பெருந்தொகையானேர் சமுகமளித்துத் திருவிருந்தருந்தித் திருநாளைச் சிறப்பாகக் கொண்டாடினர்.

**பரிசுத்த வியாகுலமாதா திருநாள்:**

எமது பங்குத்தேவாலயத்தில் சென்ற 28-3-58 வெள்ளிவாரம் வியாகுலமாதா பக்திச்சபையினரின் அயரா உழைப்பின்பயனுக வியாகுலமாதா திருநாள் பக்திச்சிறப்பாகக் கொண்டாடப்படலாயிற்று. முதனாள் வியாழக்கிழமைபிற்பகல் 6-30 மணியளவில் ஒலிபரப்பி மாதாவின்புகழைப் பாடிப்பரப்பி மக்களை ஆலயத்திற் கழைத்துக்கொண்டிருந்தது. செபமாலை, பிரார்த்தனையின்பின் வியாகுலத்தாயார் யேசுநாதரைப் பெற்றது முதல் சிலுவையில்மரிக்கும்வரை இக் கண்ணீர்க்கணவாயில் வியாகுலத்தையே அனுபவித்துச் சிலுவையடியில் மனுக்குலத்தை மக்களாகப்பெற்று, இன்றுவரை பல்வேறு காட்சிகளினல் எங்களைமோட்சபாதையில் வழிநடத்திவரும் வரலாற்றைச்சிறந்த முறையில் எடுத்துக்காட்டிப் பங்குக்குரவர் அருமையான பிரசங்கஞ்செய்தார். அதன்மேல் மாலை ஆராதனை பாடித் தேவநற்கருணைஆசீர்வாதம் அருளப்பட்டது.

தொடர்ந்து பரிசுத்தவியாகுலமாதா திருச்சுரூபம் பக்திச்சபை அங்கத்தினர்நால்வரால் தாங்கப்பட்டுமெழுகுவர்த்தித்தீபங்களோடும், செபங்கள், பாடல்களோடும் ஆலயவீதிவழியே சுற்றுப்பிரகாரமாக எடுத்துச்செல்லப்பட்டது. அடுத்தநாட்காலை 6மணிக்குப் பாடற்பூசையும், தேவநற்கருணை ஆசீர்வாதமும், பின்னர் வியாகுலமாதா பக்திச்சபையாரின் கூட்டமும் நடைபெற்றன. மூன்றுபுதியஅங்கத்தவர்கள் முறைப்படி இச்சபையில் சேர்க்கப்பட்டுச் சின்னங்கள்பெற்றனர். மாதாவுக்கு ஒப்புக்கொடுக்கும் காணிக்கைச்செபம் சொல்லப்பட்டதும் பங்குக்குரவரால் "நீங்கள் உப்பாயிருக்கிறீர்கள்; இப்பங்கில் உங்கள்ஆத்மீக வேலைகளைத் திறம்படச்செய்து கிறீஸ்துநாதரின்திருவாக்குப்படி நடப்பீர்களாக" என்று புத்திமதிசொல்லப்பட்டது.

பிற்பகல் 5மணியளவில் திருச்சிலுவைப்பாதையில் சபையோரனைவரும் கலந்துகொண்டனர். பின்னர் எல்லோரும் ஒன்றுகூடிக் குருமனை சேர்ந்து நல்லுரைகூறிப் பங்குக்குரவரைவாழ்த்தி அன்பளிப்புமவழங்கினர். சுவாமியார் இன்சொல்கூறிச் சபையார்ஒவ்வொருவருக்கும் "யேசுபெருமானின் திருப்பாடுகள்" என்னும் புத்தகமும், ஒவ்வோர்படமும்அளித்து அனைவரையும் ஆசீர்வதித்தனர். முடிவில் வியாகுலமாதாசபையில் நீண்டகாலம் அங்கத்தவராகவும், அர்ச். சவேரியார் சேவாசங்கத்தின் உபதலைவராகவும்இருந்து அன்றேமரணித்த திருமதி. மேர்சி பெஞ்சமின் என்பவவுக்குத் தங்கள்கடைசிமரியாதையைத் தெரிவிக்கச் சபையாரனைவரும் சென்று அன்னரின் ஆன்மஇளைப்பாற்றிக்காக வேண்டிக்கொண்டார்கள்.

— நிருபர்



## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

கிறீஸ்துஇராசா, சதர்சகாயமாதா, அர்ச். சூசையப்பர், அர்ச். பிலிப்புநேரியார் இவர்களிடம் நான்கேட்டமன்றாட்டு அனுகூலமாயிற்று. இவர்களின்நாமம் என்றும் புகழப்படுவதாக.

சி. பி. செல்வராசா
இளவாலை

* * *

எனக்கு வருமதியாயுள்ள நியாயமான ஒருதொகைப்பணம், கையில்வந்து சேரும் என்பதற்கான அறிகுறிகள் ஒன்றுமே காணப்படவில்லை. அதனல் நான் வெகுவாகக் கலங்கித்தவித்துக் கடைசியாகச் சதாசகாயமாதாவைச் சரணடைந்து அவளின்சலுகையை இரந்து மன்றாடிவந்தேன். எதிர்பாராதவிதமாகப் பணம்திரும்பக்கிடைத்து ஆனந்தமுற்றேன். சதாசகாயமாதாவின் நாமம் புகழப்படுவதாக! நேர்த்திப்படி இதனைப் பிரசுரஞ்செய்கின்றேன்.

மாதாவின் அடியாள்

* * *

ஓ, சதாசகாய நாயகியே! நம்பிக்கையின் தாயே! உம்மிடத்தில் யான் கேட்டுக்கொண்ட இந்த மன்றாட்டை எனக்குத் தந்தருளினீர். எனக்கு ஏற்பட்ட வருத்தம் சுகமாகும்படி தாயே உம்மிடமும், உம்மேல் பக்திகொண்ட அர்ச். அந்தோனியாரிடமும், அர்ச். சூசையப்பரிடமும் யான் நேர்த்திசெய்து நம்பிக்கையுடன் வேண்டிக்கொண்டேன். எனது மன்றாட்டுக் கேட்கப்பட்டு யான் தற்போது பூரண சுகத்துடன் இருக்கிறேன். எனது நேர்த்தி பூர்த்தியானதால் இதைப் பிரசித்தம் செய்கிறேன். இவ்வர்ச்சியசிட்டர்களின்நாமம் எங்கும் என்றும்புகழப்படக்கடவதாக.

J. சூசைப்பிள்ளை
திரிகோணமலை.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, April 10-1958.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org